# கீதாசார்யன் 512-513

**कर्मण्येवाधिकारस्ते मा फलेषु कदाचन**



**ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்**

ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல் வாழி
தாழ்வாதுமில் குரவர் தாம் வாழி – ஏழ்பாரும்
உய்ய அவர்கள் உரைத்தவைகள்தாம் வாழி
செய்யமறை தன்னுடனே சேர்ந்து.

| | | |
|---|---|---|
| ஆண்டு **43** | நம்மாழ்வார் ஆண்டு 5121 பிலவ சித்திரை (மே, ஜுன் 2021) | இதழ் **8, 9** |


## திருக்கோயில்கள் தரிசனம்

சென்ற இதழில் எழுதியிருந்த விஷயத்தையே இந்த இதழிலும் தொடருகிறோம். கோவிட் நோயின் பெருந்தொற்றின் இரண்டாம் அலை எம்பெருமானுடைய அருளால் சிறிதுசிறிதாகக் குறைந்து வருகின்றது. அரசாங்கமும் அதனைக் கருத்தில் கொண்டு ஊரடங்கில் பல தளர்வுகளை அறிவித்துள்ளது. ஆனாலும் கோயில்களைத் திறப்பது பற்றி அரசாங்கம் இன்னும் ஏதும் அறிவிக்கவில்லை என்பது வருத்தமளிக்கின்றது.

பற்பல வணிக நிறுவனங்களையும் சில குறிப்பிட்ட நிபந்தனைகளுடன் குறிப்பிட்ட காலங்களில் திறந்து வைக்கலாம் என்று அரசு அறிவித்துள்ளது. ஆனால் பக்தர்களுக்கு உயிரான திருக்கோயில்களைத் திறந்து வைக்கலாம் என்று அறிவிக்காததன் காரணம் புரியவில்லை.

எல்லாத் திருக்கோயில்களுக்கும் பெரும் கூட்டங்களாக பக்தர்கள் வருவதில்லை. ஒரு சில கோயில்களுக்கு மட்டுமே பக்தர்கள் அதிகமாகக் கூடுகின்றனர். எனவே ஒவ்வொரு திருக்கோயிலிலும் ஒரு நாளைக்கு சில நூறு பக்தர்களை மட்டுமே அனுமதித்துக் கோயில்களைத் திறக்கலாம். அதற்கும் பக்தர்கள் முன்பதிவு செய்து கொள்ள வேண்டும் என்றும், அவர்கள் தடுப்பு மருந்துகளைச் செலுத்திக் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்றும், கோவிட் பெருந்தொற்றைத் தடுப்பதற்கான விதிமுறைகளைக் கட்டாயம் கடைபிடிக்க வேண்டும் என்றும் சில நிபந்தனைகளை விதித்து கோயில்களுக்குள் பக்தர்களை அனுமதிக்க வேண்டும். நோயின் தாக்கத்தினால் வருந்திக் கிடப்பவர்கள் மனச்சாந்தி பெறுவதற்குக் கோயில்களில் வந்து தரிசனம் செய்வதற்கு உடனே வழி வகுக்க வேண்டும்.

## கீதாசார்யன் வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | வைணவ ஆசார்யர்களின் வாழ்வும் வாக்கும் | ரூ. 600 |
| 2. | இயற்பா வியாக்கியானம் (நம்பிள்ளைபடி) | ரூ. 400 |
| 3. | ரகசியக்ரந்தங்கள் மூலம் (கையடக்கப்பதிப்பு) | ரூ. 120 |
| 4. | ஸ்ரீவைஷ்ணவ முத்துக்கள் (முதல் பகுதி) | ரூ. 200 |
| 5. | ஸ்ரீவைஷ்ணவ முத்துக்கள் (இரண்டாம் பகுதி) | ரூ. 200 |
| 6. | வெண்ணெய்க்காடும் பிள்ளை | ரூ. 100 |
| 7. | ஸ்ரீமத்பகவத்கீதை (தெளிவுரை) | ரூ. 100 |
| 8. | ஸ்ரீவைஷ்ணவகுருபரம்பரை | ரூ. 100 |
| 9. | ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமஸ்தோத்ரம் (மும்மதவிளக்கம்) | ரூ. 500 |
| 10. | ஆழ்வார்கள் யாவர்? | ரூ. 100 |
| 11. | ஸ்ரீவைஷ்ணவம் (ஸ்ரீகாரப்பங்காடு ஸ்வாமி எழுதியது) | ரூ. 100 |
| 12. | சாளக்கிராமங்களின் சிறப்பு, திருமண்காப்பின் பெருமை | ரூ. 100 |

மேற்கண்ட புத்தகங்கள் அனைத்தையும் சேர்த்து வாங்குபவர்களுக்கு ரூ. 2000க்கு இப்புத்தகங்கள் வழங்கப்பெறும் (தபால் செலவு தனி).

**கீதாசார்யன்** பத்திரிகைக்குத் செலுத்தியுள்ள சந்தா முடிவடைந்த உடன், சந்தா முடிவடைவது பற்றித் தனித் தபாலில் தெரிவிக்கப்படும். உடனடியாகச் சந்தா செலுத்திப் புதுப்பித்துக் கொள்ளாதவர்களுக்கு அடுத்த இதழ் அனுப்பப்படமாட்டாது. சந்தா செலுத்துபவர்கள் பின்கண்ட வங்கியின் (எந்த ஊரிலும்) எந்தக் கிளையிலும் கீதாசார்யன் சந்தா செலுத்தலாம்:

**Account in the Name of GEETHACHARYAN**

**Punjab National Bank A/c No. 0346002100022891 IFSC : PUN0034600**

மேற்கண்ட வங்கிகளில் சந்தா செலுத்திய விவரத்தை, கீதாசார்யன் அலுவலகத்திற்குத் தொலைபேசி மூலமாகவோ, SMS, கடிதம், geethacharyan@yahoo.com க்கு E-mail மூலமாகவோ தெரிவிக்க வேண்டும். தொலைபேசி எண் : **9444911192** (காலை 10 மணிமுதல் இரவு 8 மணி வரை மட்டும். ஞாயிற்றுக் கிழமை விடுமுறை.) மணியார்டர்/டி.டி./ உள்ளூர் காசோலைகள் மூலமும் சந்தா செலுத்தலாம்.

## கீதாசார்யன்

**E-mail: geethacharyan@yahoo.com**

ஆலோசகர் குழுத் தலைவர்

**T.C.A. ராமானுஜம்** M.A.B.L. I.R.S (Retd.)

ஆசிரியர்

**Dr. M.A.வேங்கடகிருஷ்ணன்** M.A., M.Phil., Ph.D., D.Litt.

துணை ஆசிரியர்

**M.A. மதுசூதனன்** (M.C.A.,M.A(Skt.),M.A(Vaishnavism)

## கீதாசார்யன்

**7, தெற்கு மாடவீதி, திருவல்லிக்கேணி,**

**சென்னை 600005**

**மூன்று வருடச் சந்தா ரூ. 500**

**ஆயுள் சந்தா ரூ. 2500**

# அண்ணா ஸ்வாமி உபந்யாஸமாலை

*ஸ்ரீமதுபயவேதாந்த மஹாவித்வான் காஞ்சீ பிரதிவாதி பயங்கரம்*

**அண்ணங்கராசார்ய ஸ்வாமி**

## ரஹஸ்யார்த்த விசேஷம்

ஸித்தோபாய வரணத்தைக் கூறுமதான த்வய ரஹஸ்யத்தைப் பற்றி இங்குச் சிறிது பேசுவோம்; இந்த ரஹஸ்யத்திற்கு அதிகாரிகள் கிடைப்பது அரிது. ஆகிஞ்சந்யமும் அநந்ய கதித்வமுமாகிற இரண்டுமுடையவனே த்வயாதிகாரியாவான். ஆகிஞ்சந்யமாவது – 'நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன்' என்கிறபடியே ஒருவிதமான கைம்முதலுமில்லாமை. அநந்யகதித்வமாவது –'புகலொன்றில்லாவடியேன்', 'களைகண் மற்றிலேன்' என்கிறபடியே வேறு ரக்ஷகனை நெஞ்சிலும் நினையாமை. ஆக இவ்விரண்டும் வாய்க்கப்பெற்ற அதிகாரியே த்வயாதிகாரியாவான்.



இரண்டு கூறாக (கண்டங்களாக) இருக்கின்ற த்வயத்தில் முதற்கண்டத்தினால்– பெரிய பிராட்டியாரைப் புருஷகாரமாகப்பற்றி எம்பெருமான் திருவடிகளை உபாயமாகப் பற்றுகிறது. (ஸ்ரீமத் என்பதனால் பெரிய பிராட்டியாரை முன்னிடுறது; நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே என்பதனால் எம்பெருமான் திருவடிகளை உபாயமாகப் பற்றுகிறது.) உத்தர கண்டத்தாலே, பெரிய பிராட்டியாரும் அவனுமான சேர்த்தியிலே கைங்கரியம் பண்ண வேணுமென்கிற ப்ரார்த்தனை காட்டப்படுகிறது. ஸ்ரீமதே என்று பிராட்டியுமவனுமான சேர்த்தி; நாராயண பதத்தின் மேலுள்ள சதுர்த்தி கைங்கர்ய ப்ரார்த்தனையைக் காட்டும்; நமஸ்ஸு கைங்கர்ய விரோதி நிவ்ருத்தியைச் காட்டும்.)

ஸ்ரீ என்கிற சொல்லுக்கு ஸம்பத்து முதலியவை களும் பொருளானாலும் இங்கே இச்சொல் பெரிய பிராட்டியார்க்குத் திருநாமமாயிரா நின்றது. 'ஸ்ரீரிதி ப்ரதமம் நாம லக்ஷ்ம்யா: என்கிற ப்ரமாண வசனமும் இங்கே அநுஸந்தேயம்.

இந்த ஸ்ரீ சப்தமானது, ச்ரீஞ் – ஸேவாயாம் என்கிற தாதுவிலே இரண்டு வகையான வ்யுத்பத்தியால் நிஷ்பந்நமாகும். ஸ்ரீயதே இதி ஸ்ரீ: (இது கர்மணி வ்யுத்பத்தி) ச்ரயதே இதி ஸ்ரீ: (இது கர்த்தரி வ்யுத்பத்தி) கர்மணி வயுத்பத்தியில் எல்லாராலும் ஸேவிக்கப் படாநின்றாள் என்று பொருள் படுகின்றது. ஸகல சேதநர்கட்கும் இவளைப்பற்றியே தங்களுடைய

சேஷத்வரூபமான ஸ்வரூபம் ஸித்திக்குமென்றவாறு. கர்த்தரி வ்யுத்பத்தியில் ஈச்வரனை இவள் ஸேவியா நின்றாளென்று பொருள்படுகிறது. இவள் தனக்கும் ஈச்வரனைப்பற்றித் தன்னுடைய ஸ்வரூப லாபமாயிருக்குமென்றவாறு. ஸகல சேதந விஷயத்தில் சேஷித்வத்தையும் ஈச்வர விஷயத்தில் சேஷத்வத்தையும் உடையவள் என்று ஸ்ரீ சப்தார்த்தம் தேறிற்றாயிற்று.

எம்பெருமானுக்கு உபாயத்வமும் உபேயத்வமுமாகற இரண்டு தன்மைகளுண்டானாப் போலே இவளுக்கு புருஷகாரத்வமும் உபேயத்வமுமாகிற இரண்டு தன்மைகளுண்டு; புருஷகாரத்வமென்கிற தன்மையை நினைத்து இப்போது இவளைச் சொல்லுகிறது. உபாய வஸ்துவில் விசேஷணமாயிருக்கிற தன்மையையிட்டு இவளுக்கும் உபாயத்வமுண்டென்கிற பக்ஷம் யுக்தியுக்தமன்றென்க.

எம்பெருமானுடைய நாராயணத்வப்ரயுக்தமான ஸ்வாபாவிக ஸம்பந்தத்தைத் தெரிந்து கொண்டு அவனை ஆச்ரயிக்கிற இச்சேதநனுக்கு இவளைப் புருஷகாரமாக முன்னிடவேண்டிய அவச்யம் என்ன? என்னில்; குளிர்ந்த ஜலத்திலுங்கூடக் கொடிதான நெருப்பு கிளருமாபோலே, ஸர்வபூத ஸுஹ்ருத்தானவன் திருவுள்ளத்திலே சேதனன் அளவுகடந்து பண்ணின அபராதமடியாகச் சீற்றம் பிறப்பதுமுண்டே; அங்ஙனே சீற்றம் பிறந்தால் அவ்வபராதத்தைப் பொறுப்பது இப்பிராட்டிக்காக. தன்னுடைய உபதேசாதிகளாலே அச்சீற்றத்தை யாற்றி தயையை ஜநிப்பிக்கும் இவள், ஆகையாலே ஸம்பந்தவுணர்ச்சியுள்ளவனுக்கும் அபராதபயத்தாலே புருஷகாரத்தை முன்னிடுகை அவசியமேயென்க.

பிராட்டியின் புருஷகாரம் அவ்வளவு காரியம் செய்யுமோவென்னில், 'அகில ஜகந்மாதரம்' என்கிறபடியே சேதநர்கட்கு இவள் மாதாவாய், அந்த ஸம்பந்தமடியாக இவர்களுடைய வருத்தம் கண்டு பொறுத்திருக்கமாட்டாதே மிருக்கறவொரு தன்மையும், எம்பெருமானுக்குப் பத்நியாய் 'பித்தர் பனிமலர்மேல் பாவைக்கு' என்கிறபடியே அவன் தன் வைலக்ஷண்யத்தைக்கண்டு பிச்சேறித் தன் சொற்படி நடக்கும்படி அபிமதவிஷயமாயிருக்கிறவொரு தன்மையும் உடையளாகையாலே ஒருவகையாலும் விபலமாக மாட்டாத புருஷகாரம். உலகில் புருஷகாரம் செய்பவர்களுக்கு இரண்டு தன்மைகள் வேண்டும்; எவர் விஷயத்தில் புருஷகாரம் செய்யவேணுமோ அவர் விஷயத்தில் நெஞ்சார்ந்த அன்பு இருக்கவேண்டியது ஒன்று; யாரிடத்தில் புருஷகாரம் செய்யவேணுமோ அவரிடத்தில் தம் வாக்கு வெற்றி பெற்றே தீரும்படியான வால்லப்யமிருக்கவேண்டியது மற்றொன்று. இவ்விரண்டும் பிராட்டியிடத்தே புஷ்கலமென்று நிரூபிக்கப்பட்டதாயிற்று.

இதெல்லாம் வாஸ்தவந்தான்; ஈச்வரனோ கேட்பாரற்ற ஸ்வதந்திரன்; அன்னவன் சேதநருடைய குற்றங்களை நிறுத்து அவற்றுக்குத் தக்கபடி தண்டனை செலுத்தியே தீர்வேன் என்று நிம்குமளவில் பிராட்டி தான் என்ன செய்ய முடியும்? என்னில்; இது இவளுடைய செய்தியறியாதார் செய்யும் ஆக்ஷேபமாகும். இவள் சிறையிருந்த காலத்தில் இவளைப் பத்துமாதம் இடைவிடாது படாத பாடுகளும் படுத்தின ராக்ஷஸிகளின் கொடுமையை மரத்தின்மேல் மறைந்திருந்து கண்ட அனுமான் 'பெருமாள் வெற்றிபெற்ற பின்பு இவர்களைப்

பார்த்துக்கொள்வோம்' என்று ஆறியிருந்து, ராவணவதமான பின்பு ஓடிவந்து ''இவ்வரக்கிகளின் அபராதங்களைக் கணக்கிட்டு சித்திரவதம் பண்ண நினைத்திருக்குமெனக்கு இடமளிக்கவேணும்'' என்று (பிராட்டியை நோக்கிக்) கேட்டவளவிலே, சொல்மிறுக்கனான அவ்வனுமானையுமுட்பட இவள் உபதேசத்தாலே பொறுப்பித்தாளென்பது ஸ்ரீராமாயண ப்ரஸித்தம்; அப்படிப்பட்டவிவள் 'அல்லிமலர்மகள் போகமயக்குக்களாகியும் நிற்கும்மம்மான்' என்கிறபடியே தன் போக்யதையிலே மிகவும் ஈடுபட்டிருப்பவனாய், 'நின்னன்பின் வழிநின்று சிலைபிடித்தெம்பிரானேக' என்கிறபடியே ''மாயாமிருகத்தின் பின்னேபோ'' என்றாலும் விளைவதறியாதே அதின்பின்னே தொடர்ந்து போமவனாய் இப்படித் தனக்கு விதேயனாய் ரஸிகனாயிருக்குமவனைப் பொறுப்பிக்கவல்லளென்பது பற்றிக் கேட்கவேணுமோ?

''ஸ்ரீமத்'' என்கிற பதத்தில் ப்ரக்ருதியான ஸ்ரீ என்பதன் பொருள் விவரிக்கப்பட்டதாயிற்று. அதன்மேல் ஏறிக்கடக்கும் மதுப்பென்கிற ப்ரத்யயத்தின் பொருள் இனிமேல் விவரிக்கப்படுகிறது. (எப்போதும் கூடியிருத்தல்) என்னும் பொருளில் 'மதுப்பு' வந்திருப்பதாகக்கொள்க. இத்தால் புருஷகாரபூதையான பிராட்டியும் ஈச்வரனுமான இருவருடைய சேர்த்தியும் எப்போது முண்டென்பது சொல்லப்பட்டதாயிற்று.

இந்த நித்ய யோகம் எப்படிப்பட்டதென்னில், ஸ்வரூபாநுபந்தித்வ ப்ரயுக்கமான நித்யயோகமென்று கொள்ளக்கடவது. ஞானம் ஆனந்தம் முதலியவை எப்படி பகவானுக்கு ஸ்வரூப நிரூபகங்களோ அப்படி ஸ்ரீபதித்வம் நிரூபகமாகையாலே இவளோடே கூடியே ஈச்வர வஸ்துவின் ஸத்தையுளதாகக் கொள்க.

இவளுடைய குணப்ரயுக்தமாகவும் நித்யயோகமுண்டு; அபராதங்களைக் கணக்கிட்டு தண்டிக்க வல்லவனான ஈச்வரனுடைய ஸ்வாதந்தரியத்தையும் சேதனர் செய்யும் குற்றங்களின் அளவில்லாமையையுங் கண்டு 'ஐயோ! என்னாகுமோ!' என்கிற பயத்தாலே ஈச்வரனை விட்டு ஒரு நொடிப்பொழுதும் அகலமாட்டாள்.

இப்படி இவளிருந்து நோக்குகையாலே, ஈச்வரனுடைய ஸ்வாதந்தரியத்தைக் கண்டோ தன்னுடைய அபராதங்களை நினைத்தோ சேதநன் அஞ்சவேண்டிய ப்ரஸக்தியில்லை.

அன்றியும், பிராட்டியானவள் எப்போதும் எம்பெருமானேடு கூடியே யிருக்கின்றாளென்று தெரிந்துகொள்ளுமளவில், எந்த ஸமயத்திலும் எம்பெருமானை ஆச்ரயிக்கலாம் என்பது தேறிற்றாகும். 'புருஷகாரம் செய்பவள் அருகேயிருக்கும் காலம் பார்த்து ஆச்ரயிக்கவேணும்' என்று ஸமயப்ரதீக்ஷை வேண்டியதில்லை; ஆச்ரயிக்க வேணுமென்கிற ருசி பிறக்கவேண்டுவதத்தனையே.

பிராட்டியின் புருஷாகாரம் அவசியம் வேண்டியதேயென்பதை விபவாவதாரகாலத்துச் செய்தியாலும் தெரிந்து கொள்ளலாம்: ராமாவதாரத்தில், அளவுகடந்த அபராதத்தைச் செய்து ப்ரஹ்மாஸ்த்ரத்திற்கு இலக்காய்த் தலையறுப்புண்ண வேண்டின காகம் க்ருபைக்கு இலக்காய்த் தலைபெற்றுப்போனது பிராட்டி.யின் ஸந்நிதியினாலேயாம். அவ்வளவு அபராதியல்லாத ராவணன் ராமசரத்துக்கு இலக்காய் முடிந்துபோனது இவளுடைய ஸந்நிதி யில்லாமையினாலேயாம். ஆகவே பிராட்டியின் ஸந்நிதானம் பழுதுபடாதென்று உணர்க.

# சேற்றில் ஒரு குளியல்

## T.C.A. வேங்கடேசன்

இதென்ன? சேற்றில் குளியல் என்று நாம் ஒன்று செய்வதா? சுத்தமான ஜலத்திலோ நீர் நிலைகளிலோ நீராடுவதன்றோ நமக்குக் குளியல் என விதிக்கப்பட்டுள்ளது. சாஸ்த்ரங்கள் சொல்லும் ஆசாரமும் இதைத் தானே வலியுறுத்துகிறது.

ஸ்நாநங்கள் நித்ய ஸ்நாநம், நைமித்திக ஸ்நாநம், ப்ராயச்சித்த ஸ்நாநம் என்று பல வகைப்படும். பல கார்யங்களைச் செய்வதற்கு குளித்தல் அவஸ்யமாகிறது. "குளித்து மூன்றனலை ஓம்பும்" என்றார் தொண்டரடிப்பொடி ஆழ்வார். "ஸ்நாத்வா புஞ்ஜீத" என்றது சாஸ்த்ரமும்.

ஸ்நாநம் செய்வதற்கு பல விதிகள் சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டுள்ளன. ஆனால் எவற்றிலும் சேற்றில் குளிக்க வேண்டும் என்றில்லையே. மாறாக சேற்றை, அதாவது உடம்பில் ஏற்பட்ட அழுக்கைப் போக்கிக் கொள்ள வேண்டும் என்று தானே உள்ளது.

நாம் அறிந்தவற்றில் ம்ருகங்கள் தான் சேற்றில் புரளுகின்றன. இதில் தலையாயதாக நாம் பார்ப்பவை எருமை மாடுகளையும், வராகங்களையும்.

"மாசுடம்பில் நீர் வாரா மானமில்லா பன்றி" என்றாள் ஆண்டாளும்.

அளவு படாத வராகம் என்றும், உவமானம் சொல்ல இயலாத வராகம் என்றும் கொள்ளத் தக்கதாயினும், அபிமாநமில்லா பன்றி என்றே திருவுள்ளம் பற்றினார் பெரியவாச்சான் பிள்ளை. "ஈச்வராபிமாநம் வாஸனையோடே போனபடி" என்பது அவர் வ்யாக்யானம்.

இப்படி வராஹ நாயனார் இருக்கலாம். அது நமக்கு அமையுமோ என்னில், உண்டு என்கிறார் குலசேகர ஆழ்வார்.

"அரங்கன் கோயில் திருமுற்றம் சேறு செய் தொண்டர் சேவடி செழுஞ்சேறு என் சென்னிக்கணிவனே" – அதாவது, அடியார் திருவடி பட்ட சேற்றை அணிவதே உசிதம், என்பது அவர் திருவாக்கு. அது நிற்க.

திருவரங்கன் திருக்கோயில் திருமுற்றம் எவ்வாறு சேறு படிந்ததாயிற்று?

கடைத்தலை சீய்க்கப்பெற்றால் கடுவினை களையலாகும் என்றிருக்கும் தொண்டர் நிரம்பியிருக்க, அவன் திருமுற்றம் சுத்தமாகவன்றோ இருக்க வேணும். கேண்மின்.

இவ்வாழ்வாரே இதை முன்னர் விளக்குகிறார்.

"வண்பொன்னிப் பேராறு போல் வரும் கண்ணநீர் கொண்டு என்பது" பாசுரம். திருமுற்றத்தைத் சீய்த்து வைக்கக் குழுமியிருக்கும் தொண்டர் கண்களிலிருந்து பெருகி வரும் கண்ணீரானது அவ்விடத்தைச் சேறு செய்ததாகிறது. அந்த சேறே தம் தலைக்கு அலங்காரம் என்கிறார் ஆழ்வார். அப்படிச் சேறாகும் அளவுக்கும் கண்ணநீர் பெருகுமோ என்னில்.

நம்மாழ்வார் கூறும் வார்த்தை காண்மின். திருவரங்கம் விஷயமான பாசுரத்தில், பராங்குச நாயகியின் தாய் தன் மகளின் நிலை கூறுமிடத்தில், "கங்குலும் பகலும் கண்துயில்

அறியாள், கண்ண நீர் கைகளால் இறைக்கும்" என்கிறாள். கைகளால் எடுத்து இறைக்கும் அளவிற்குக் கண்ணீர் பெருக்கி நின்றாள் நாயகி என்கிறாள் திருத்தாயார்.

தானான தன்மையிலும் எம்பெருமான் செய்கைகளைக் கேட்குந்தோறும், கண்களில் இருந்து அருவி போல் நீர் பெருகும் என்று சொன்னார் இவ்வாழ்வாரே: "கேட்கும் தோறும் என் நெஞ்சம் நின்று நெக்கு அருவி சோரும் கண்ணீர்". இதனாலிறே இவர் ஆறு மாதம் மோஹித்துக் கிடந்தது.

குலசேகர ஆழ்வாரும் "ஆராத மனக் களிப்போடு அழுத கண்ணீர் மழை சோர" என்று கண்ணீர் மழையெனப் பெருகும் என்றார்.

இப்படியே "கண்பனி சோர" என்றும், "கண்ணநீர் சோர" என்றும், "கண்ணிணை முத்தம் சோர" என்றும் பலவுள. இது அடியார் அளவு மட்டுமன்று, அடியார்களைக் கண்ட அரங்கன் கண்களிலிருந்தும் கருணை நீரானது அந்தத் திருமுற்றத்தில் பெருகும் என்கிறார் பராசர பட்டர் – "சேஷசய லோசநாம்ருத நதீ" என்பது ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்தில் அவர் கூறும் வார்த்தை. அந்தப் ப்ரவாஹத்திலிருந்து தப்பவே திருமணத் தூண்கள் உள்ளன என்று சமத்காரமாகப் பேசுகிறார் பட்டர். குலசேகர ஆழ்வார் "மணத்தூணே பற்றி நின்று" என்பதற்கு பட்டர் காட்டும் கருத்திது.

திருப்பாவையில் ஆண்டாளும் "நின்று பால் சோர நனைத்தில்லம் சேறாக்கும்" என்றாள். அங்கு எருமையின் நினைவினாலேயே பால் சுரந்து சேறானது. அது போலேயே, இங்கு எம்பெருமான் நினைவினாலேயே அடியாருக்கும், அடியார் நினைவினாலேயே எம்பெருமானுக்கும் கண்ணநீர் சுரந்து சேறாயிற்றென்பதாம்.

இப்படி அடியார் கண்களிலிருந்து கண்ண நீர் ப்ரவஹித்து சேறு செய்ய நாம் கண்டதுண்டோ என்னில், உண்டு என்று நாம் இதிஹாஸ ச்ரேஷ்டமான ஸ்ரீ ராமாயணத்தில் காண்கிறோம். யுத்தம் முடிந்து அயோத்யை திரும்பும் வழியில் ஸ்ரீ ராமபிரான் பரத்வாஜ முனிவர் ஆச்ரமத்தில் தங்கினான். அப்போது முனிவரிடத்தில் அயோத்யையைப் பற்றியும், தாய்மார்களைப் பற்றியும், பரதாழ்வானைப் பற்றியும் எம்பெருமான் வினவ, அனைவரும் நலமாக உள்ளனர் என்று கூறும் முனிவர் பரதனைப் பற்றி இவ்வாறு கூறுகிறார்.

பங்கதிக்தஸ்து பரதோ ஜடிலஸ்த்வாம் ப்ரதீக்ஷதே
பாதுகே தே புரஸ்க்ருத்ய ஸர்வம் ச குசலம் க்ருஹே

அதாவது உம்முடைய பாதுகைகளை முன்னே வைத்துக் கொண்டு, நீர் வருவதை எதிர் நோக்கி இருக்கும் பரதனானவன் ஜடைமுடி தரித்தும், தன் உடம்பு முழுவதும் சேற்றை அணிந்தும் (பங்க திக்த:) இருக்கிறான் என்றார்.

இப்படி முனிவர் சொன்னது சரியா? பரதன் திருமேனியில் இப்படி புழுதி எவ்வாறு படிந்திருந்தது? என்று நாம் ஆலோசிக்க வேண்டும்.

பரதன் ஜடா முடி தரித்திருந்ததனால் அவன் குளியாதிருந்தான், எனவே தான் அவன் திருமேனி புழுதி படிந்திருந்தது என்பாருண்டு. ஆனால் இது ரசமன்று.

யுத்தம் முடிந்த பின் பரதனை விரைவில் சென்று அடைய இச்சித்த எம்பெருமான் குளியலை வெறுத்தான் என்று அவனே சொன்னதாகக் காண்கிறோம்.

தம் விநா கைகயீ புத்ரம் பரதம் தர்மசாரிணம்

ந மே ஸ்நாநம் பஹுமதம் வஸ்த்ராண்யாநி ச

என்பது ராகவன் வார்த்தை. அதாவது தர்மத்தின் வழி நடப்பவனான பரதனைப் பிரிந்திருப்பதால் ஸ்நானத்தையும் , உடைகளையும் ஆபரணங்களையும் விரும்பவில்லை, அயோத்தியை நோக்கி விரைகிறேன் என்றான் சக்ரவர்த்தித் திருமகன்.

ஒரு வேளை இது போலவே பரதனும் இருந்திருப்பானோ என்னில். ஆடை ஆபரணங்களை அவன் வெறுத்திருந்தான் என்பது அவன் கொண்ட திருக்கோலம் மூலம் நமக்குத் தெரிகிறது. ஆனால் அவன் ஸ்நானம் செய்வதைத் தவிர்க்கவில்லை என்பதை நாம் லக்ஷ்மணன் வாயிலாக அறிகிறோம். பரதன் நித்யமும் ஸரயு நதியில் இறங்கிக் குளித்து வந்தான் என்கிறார் இளைய பெருமாள் – "கதம் நு அபரராத்ரேஷு ஸரயூமவகாஹதே".

எனவே அவன் திருமேனியில் புழுதி படிந்ததற்கு வேறொரு காரணம் இருக்க வேண்டும். அதை ஆசார்ய ஹ்ருத்யம் 127வது சூர்ணையில் அழகாகக் காட்டுகிறார் அழகிய மணவாள நாயனார் – "அன்னை என் செய்யில் என் ராஜ்யமும் யானே என்று பெருஞ்செல்வமும் இச்சியாமல் வேண்டிச் சென்று திருவடியே சுமந்து விரைந்து வருமளவும் கண்ணநீர் பங்கமாக நிலம் துழாவிக் குடிக்கிடந்த கையறவும்" என்று.

இதில் காட்டுக்குச் சென்று இராம பிரானுடைய திருவடி நிலைகளைச் சுமந்து மீண்டு வந்த பரதன் தன்னுடைய பெருக்காறு போன்ற கண்ணநீரால் ஏற்பட்ட சேற்றிலே மூழ்கிக் கிடந்து தன் சரீரம் முழுதிலும் அழுக்குப் படிந்து கிடக்க இருந்தான் என்று ஸுஸ்பஷ்டமாகக் காட்டுகிறார் ஸூத்ரகாரர்.

இப்படியாக, எம்பெருமான் அடியார்கள் திருவடி ஸம்பந்தம் பெற்ற துகளானது அவ்வடியார்களின் திருக்கண்களிலிருந்து பெருகும் நீரினாலே சேறாக்கப்பெற்று, அச்சேற்றே நமக்கு தூய்மை தரும் வஸ்துவாகிறது என்றும், அதில் குடைந்தாடும் ஆட்டமே நமக்கு உன்னதமான நீராட்டம் ஆகிறது என்றும் காண்கிறோம்.

அந்தச் சேற்றில் ஆட, நமக்கு கங்கை நீரில் ஆடும் ஆசையும் வ்யர்த்தமாகி விடும் என்று "தொண்டரடிப்பொடி ஆட நாம் பெறில் கங்கை நீர் குடைந்தாடும் வேட்கை என்னாவதே?" என்கிறார் குலசேகர ஆழ்வார்.

**கீதாசார்யன்** பத்திரிகை ஆசிரியர் முதுமுனைவர் ஸ்ரீ உ.வே. வேங்கடக்ருஷ்ணன் ஸ்வாமி தினந்தோறும் காலை 6 மணிக்கு ஸ்ரீவேங்கடேச்வரா பக்தி (SVBC 2) தொலைக்காட்சியில் வழங்கி வரும் 'திவ்யதேசங்கள்' என்ற நிகழ்ச்சி, பொதிகைத் தொலைக்காட்சியில் காலை 6.30 மணிக்கு வழங்கி வரும் 'நாள்தோறும் நாலாயிரம்' என்ற நிகழ்ச்சி ஆகியவற்றின் அனைத்துப் பதிவுகளையும் youtube.comல் எப்போது வேண்டுமானாலும் கண்டு களிக்கலாம்.

# திருமங்கையாழ்வாரும் திவ்யதேசங்களும்

## (42) திருதேவனார் தொகை

அரிமேயவிண்ணகரத்திற்கு அடுத்தபடியாக திருத்தேவனார் தொகையை ஒரு பதிகத்தால் மங்களாசாஸனம் செய்துள்ளார். இத்தலம் மாதவப்பெருமாள் ஸன்னிதி என்று வழங்கப்படுவதுண்டு. திருமங்கையாழ்வார் இத்தலத்தைப் பற்றிய முதல் பாசுரத்திலேயே 'மாதவன்தான் உறையுமிடம்' என்றருளிச்செய்துள்ளார். இத்தலம் மண்ணியாற்றின் தென்கரையில் அமைந்துள்ளது; பெரும் குதிரைகளில் வந்த அரசர்களைத் தோற்கடித்து வெற்றி கொண்ட அந்தணர்கள் வாழுமிடம் என்று இத்தலத்தைப் போற்றுகின்றார் திருமங்கையாழ்வார்.

எம்பெருமானை சேவிப்பதற்காகத் தேவர்கள் வந்து திரண்ட இடம் ஆதலால் இத்தலத்திற்குத் தேவனார் தொகை என்ற பெயர் வந்தது என்பர். திருமங்கை ஆழ்வாரும் ஒரு பாசுரத்தில் தேவர்கள் அனைவரும் இத்தலத்தில் எம்பெருமானைத் துதிப்பதாகப் பாசுரம் அருளியுள்ளார்.

இந்திரனும் இமையவரும் முனிவர்களும் எழிலமைந்த
சந்தமலர்ச் சதுமுகனும் கதிரவனும் சந்திரனும்
எந்தையெமக்கருளென நின்றருளுமிடமெழில் நாங்கை
சுந்தரநற்பொழில் புடைசூழ் திருத்தேவனார் தொகையே

இந்திரனும், மற்றுமுள்ள தேவர்களும், முனிவர்களும், பிரமனும், சூரியனும், சந்திரனும் 'எமக்குத் தலைவனே! எங்களுக்கு அருள்புரியவேணும்' என்று வேண்ட அதற்கு இசைந்து நின்று அப்படியே எம்பெருமான் அருள்புரியுமிடம் திருத்தேவனார் தொகை என்று திருமங்கையாழ்வார் அருளிச்செய்கிறார்.

எல்லாப்பொருள்களையும் தனக்கு உடலாக உடையவன்; வேதங்களின் பொருளாய் நிற்பவன்; பிரமன், விஷ்ணு, சிவன் ஆகிய மூன்று வடிவங்கள் கொண்டவன்; முழுமுதற்கடவுளான எம்பெருமான்; நித்யவிபூதி, லீலாவிபூதி, அவ்விடங்களிலுள்ள பலவகைப்பட்ட உயிரினங்கள் ஆகிய இவையெல்லாம் தானேயாயிருப்பவன்; உலகங்கள் அனைத்தையும் பிரளயகாலத்தில் உண்டவன்; நான்கு வேதங்களாலும் எட்டிப் பிடிக்க முடியாத பெருமை உடைய இளம் குழந்தையாக உலகம் முழுதும் விழுங்கி ஆலந்தளிரில் பள்ளிகொண்டவன்; நரசிம்ம மூர்த்தியாக அவதரித்து, இரணியனை அழித்தவன்; சீதைப் பிராட்டியை மணம்புரிவதற்காக வில்லை முறித்தவன்; கம்ஸனால் ஏவப்பட்ட யானையைப் பாகனுடன் அழித்தவன்; கரிய மேகம்போன்ற திருமேனியை உடைய கண்ணபிரான் என்று இத்தலத்து எம்பெருமானைத் திருமங்கையாழ்வார் பலவாறு போற்றியுள்ளார்.

## (43) திருவண் புருடோத்தமம்

திருத்தேவனார் தொகைக்கு அடுத்தபடியாகத் திருவண் புருடோத்தமம் எனும் தலத்தைத் திருமங்கையாழ்வார் ஒரு பதிகத்தால் மங்களாசாஸனம் செய்துள்ளார். திருநாங்கூரிலேயே இத்தலம் அமைந்துள்ளது. வண்மை மிக்க புருஷர்களில் உத்தமனான எம்பெருமான் எழுந்தருளியுள்ள இடமாதலின் வண்புருடோத்தமம் எனப்படுகின்றது.

பிறரைத் துன்புறுத்தித் தான் வாழ நினைப்பவன் அதமன். பிறரும் வாழத் தானும் வாழ நினைப்பவன் மத்திமன். தான் தாழ்ந்தாலும் பிறர் வாழவேண்டும் என்று நினைப்பவன் உத்தமன். தன்னைத் தாழ விட்டுக் கொண்டு தன் அடியவர்களைக் காப்பதற்காக எம்பெருமான் மேற்கொண்ட பல அவதாரங்களைப் பற்றி இத்தலத்தைப் பற்றிய பதிகத்தில் திருமங்கையாழ்வார் அருளிச்செய்துள்ளார்.

கம்பமாகடலடைத்து இலங்கைக்கு மன் கதிர்முடி அவைபத்தும்
அம்பினாலறுத்து அரசவன் தம்பிக்கு அளித்தவன் உறைகோயில்
செம்பலாநிரை செண்பகம் மாதவி சூதகம் வாழைகள் சூழ்
வம்புலாங்கமுகோங்கிய நாங்கூர் வண்புருடோத்தமமே

கடலில் அணைகட்டி, இராவணனுடைய தலைகளை அறுத்து, அவனுடைய தம்பியான விபீடணனுக்கு அரசை அளித்தவன்; கடம்பமரத்தின்மீது ஏறி, காளியனுடைய படங்களில் குதித்து நடமாடியவன்; இடையர்கள் மீது இந்திரன் கல் மழை பொழிந்தபோது, கோவர்த்தன மலையைக் குடையாகப்பிடித்து, ஆயர்களையும் ஆநிரைகளையும் காத்தவன்; கம்ஸனால் ஏவப்பட்ட யானையின் கொம்பினைப் பறித்து, அந்த யானையின் பாகனைக் கொன்று, மல்லர்களை அழித்து, கம்ஸனையும் கொன்றவன்; வாணனைக் காப்பதாக வந்த சிவனும் அவனுடைய படைகளும் சுற்றத்தாரும் புறமுதுகிட்டு ஓட, வாணனுடைய தோள்களைத் துணித்தவன்; அழகிய கைகளில் தானம் வாங்கி ஓங்கி வளர்ந்து, பிரமன் துதிக்கும்படியாகவும், கங்கைநதி பெருகும்படியாகவும் திருவடிகளை நிமிர்த்தவன்; நரசிங்க உருக்கொண்டு, இரணியனை வதம் செய்தவன்; கபாலத்தில் பிச்சையிட்டு, சிவனின் சாபம் தீர்த்தவன்; சிவனைப் படைத்த நான்முகனையும் தன் உந்தியில் தோற்றுவித்தவன் என்றிப்படிப் பலவாறாக வண்புருடோத்தமத்து எம்பெருமானைத் திருமங்கையாழ்வார் போற்றுகிறார்.

பலா, மா, வாழை, பாக்கு ஆகியவற்றின் மரங்களால் சூழப்பெற்றது; மூன்று அக்னிகள், நான்கு வேதங்கள், ஐந்து மஹாயஜ்ஞங்கள், ஆறு வேதாந்தங்கள் இவை அனைத்தும் வல்ல அந்தணர்கள் வாழுமிடம்; சோலைகளில் மயில்கள் ஆட, அதற்குத் தகுதியாக குயில்கள் பாடப்பெற்றது; கரும்பு வயல்களில் செந்நெற்பயிர்களும் ஓங்கி வளரப்பெற்றது; உயர்ந்த மாடங்களில் உள்ள கொடிகள் சூரியனையும் மறைக்கும் அளவிற்கு ஓங்கி வளரப்பெற்றது; இளைய பெண்களின் சிலம்பின் ஒலியும், பந்து விளையாடும் மங்கையர்களின் கைவளைகளின் ஒலியும் திகழப்பெற்றது; உயர்ந்த தென்னை மரங்களின் பெரிய காய்கள் குளத்தில் விழ அங்குள்ள மீன்கள் துள்ளித் தடாகங்களில் பாயப்பெற்றது; பெண்குரங்கானது, நல்ல வாழைப்பழங்களை நுகர்ந்து, தனது குட்டியை அணைத்துக் கொண்டு மாமரத்தின் கிளைகளின்மேல் தங்கியிருக்கப் பெற்றது என்று இத்தலத்தின் இயற்கை வளங்களைத் திருமங்கையாழ்வார் வருணித்துள்ளார்.

### (44) *திருசெம்பொன்செய்கோயில்*

வண்புருடோத்தமத்திற்கு அடுத்தபடியாகச் செம்பொன்செய்கோயில் எனும் திருத்தலத்தைத் திருமங்கையாழ்வார் ஒரு பதிகத்தால் மங்களாசாஸனம் செய்துள்ளார்.

ராவண ஸம்ஹாரம் முடிந்ததும் ராமபிரான் தங்கத்தினால் ஒரு பசு செய்து அப்பசுவை ஒரு பிராமணனுக்கு தானம் செய்ததாகவும் அந்த பிராமணன் அந்த தங்கத்தை கொண்டு இத்தலத்தில்

உள்ள இந்த கோவிலை கட்டியதாகவும் கூறுவர். அதனால் இத்தலத்திற்குச் செம்பொன்செய் கோயில் என்ற பெயர் ஏற்பட்டது.

செம்பொன் செய்கோயில் என்னும் இத்தலம் திருநாங்கூரில் அமைந்துள்ள பதினொரு திருத்தலங்களின் நடுவில் அமைந்துள்ளது. திருமங்கையாழ்வாரும் திருநாங்கூரில் உள்ள திருத்தலங்களைப் பாடிவரும் அடைவில், நடுப்பதிகமாக இத்தலப் பதிகத்தை அமைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. இப்பதிகத்தின் ஒவ்வொரு பாசுரத்திலும் 'நாங்கை நன்னடுவுள் செம்பொன்செய்கோயிலினுள்ளே' என்றே திருமங்கையாழ்வார் அருளிச்செய்கிறார்.

பேரணிந்துலகத்தவர் தொழுதேத்தும் பேருளாளன் எம்பிரானை
வாரணிமுலையாள் மலர்மகளோடு மண்மகளும் உடன் நிற்ப
சீரணிமாட நாங்கை நன்னடுவுள் செம்பொன்செய்கோயிலினுள்ளே
காரணிமேகம்நின்றதொப்பானைக்கண்டுகொண்டுய்ந்தொழிந்தேனே

உலகத்திலுள்ள அனைவரும் எம்பெருமானுடைய நாமங்களைக் கூறி அடிபணிந்து துதிக்கப் பெற்றவனும், அவர்கள் திறத்து அருள் செய்வதனால் பேருளாளன் என்று திருநாமம் பெற்றவனும், இருபுறமும் திருமகளும் மண்மகளும் உடன் நிற்கப்பெற்றவனும், கார்மேகம் போன்றவனுமான எம்பெருமானை நாங்கை நன்னடுவுள் செம்பொன்செய் கோயிலின் உள்ளே சேவித்து வாழப்பெற்றேன் என்று திருமங்கையாழ்வார் அருளிச்செய்கிறார். தொடர்ந்து எம்பெருமானுடைய சரித்திரங்கள் பலவற்றைத் திருமங்கையாழ்வார் அருளிச்செய்துள்ளார்.

பிறப்பு கிழத்தனம் முதலியவை அற்றவன்; ஆனந்தக் கடலாக இருப்பவன்; மூன்று காலங்களிலும் உள்ளவன்; ஏழிசையின் சுவையாயிருப்பவன்; மறையின் பொருளாக இருப்பவன்; பஞ்சபூதங்கள், சந்திரன், சூரியன், பிராணிகள், மற்றுமுள்ள பொருள்கள் அனைத்திற்கும் அந்தர்யாமியாக இருப்பவன்; கடலின் நிறத்தை உடையவன்; வாமனாய்ச் சென்று உலகளந்தவன்; தேவர்கள் வணங்கும்படியாகத் திருப்பாற்கடலில் துயில்பவன்; உயர்ந்த ரத்தினகிரீடத்தை அணிந்துகொண்டிருப்பவன்; 'தீய நெஞ்சை உடைய அரக்கர்களை அழித்தவனே' என்று கூறிக்கொண்டு வந்தடைந்தவர்களுக்குத் தாய்போல் இரங்கி அருள் செய்யும் தயரதபுத்திரன்; மன்மதனுடைய அம்சமான ப்ரத்யும்னனைப் பிள்ளையாகப் பெற்றவன்; கடலில் அணை கட்டியவன்; இலங்கை அழியும்படியாக அம்பு எய்தவன்; திருமகளுடன் எழுந்தருளி யிருப்பவன்; கம்சனால் ஏவப்பட்ட யானையையும் மல்லர்களையும் அழித்தவன்; அவன் வைத்த வில்லை முறித்தவன்; காளமேகத் திருவுருவன்; அஞ்சனக் குன்றம் போன்றவன்; வாணாசுரனுடைய தோள்களைத் துணித்தவன்; திருவேங்கட மலையில் எழுந்தருளியிருப்பவன்; 'களாக் கனிபோன்ற நிறமுடையவனே! கண்ணனே! என்னுடைய காளமேகமே!' என்று கூறி உள்ளம் கனிந்திருக்கின்ற அடியவர்களுடைய இதயத்தில் தேன்போல் இனிமையாக இருப்பவன்; பேரின்பம் பெருக நிற்பவன்; தேவாதிதேவன் என்றிப்படிப்பலவாறாகச் செம்பொன்செய்கோயில் எம்பெருமானைத் திருமங்கையாழ்வார் போற்றுகின்றார்.

இச் செம்பொன்செய் கோயிலில் வாழும் அந்தணர்களுடைய சிறப்பையும் பல பாசுரங்களில் திருமங்கையாழ்வார் அருளிச் செய்துள்ளார். "சிறப்புடை மறையோர்", "திடமொழி மறையோர்", "திசைமுகன் அனையோர்", "செல்வ நான்மறையோர்", "செஞ்சொல் நான்மறையோர்", "தென் திசைத் திலதமனையவர்", "தெளிந்த நான்மறையோர்" என்று பலவாறாக நாங்கை நன்னடுவுள் செம்பொன்செய்கோயிலில் உள்ள அந்தணர்களைத் திருமங்கையாழ்வார் கொண்டாடுகிறார்.

# உதகஶாந்தியின் உட்பொருள்

ஸ்ரீமதுபயவே. வில்லூர் நடாதூர் ஸ்ரீபாஷ்யஸிம்ஹாஸனம் சாஸ்த்ரஸாஹிதீவல்லப
**கருணாகராசார்யஸ்வாமி**

திரச்சராஜி என்கிற பாம்பு ஒன்று இருப்பதாகக் கொண்டு அதனையே வடக்குத் திசைக்குரிய காவல் தேவதையாக ஏற்று அதனைப் பரவிடுவதாக ஸாமான்யமாக ஸர்ப்பாஹுதிகள் செய்து வேள்வி செய்யும் வைதிகர்கள் புரிந்து கொள்ளலாம்.

அந்தப் பாம்பை சரீரமாக உடைய எம்பெருமானைப் போற்றுவதாக ஏற்றுப் பரமைகாந்திகளும் பலனில் பற்று வைக்காமல் பகவதாராதனமாக இந்த வேள்வியைச் செய்யலாம்.

ஆனால் இதே மந்திரத்தைக் கொண்டுப் பரமைகாந்திகள் உதகசாந்தி ஜபம் செய்திடுகையில் திரச்சராஜி: என்ற சொல்லை அந்த ஜபத்திலே எப்படிப் புரிந்து கொண்டால் பாங்காக இருக்கும்?

திரச்சராஜி: என்ற சொல்லை எப்படிப் புரிந்து கொள்ள வேண்டும் என்று பத பாடத்திலே திரச்சராஜிரிதி திரச்ச - ராஜி: என வேஷ்டனை செய்து காட்டி இருக்கிறது.

இதன் அடிப்படையில் ஸ்ரீபட்டபாஸ்கரர் திரச்சீனா ராஜயோ அஸ்ய ஸந்தீதி திரச்சராஜி: என்று தமது பாஷ்யத்தில் விளக்கம் தருகிறார். தனது உடலில் பக்கவாட்டில் ராஜிகள் அதாவது கோடுகள் இருக்கும் அமைப்பை உடைய பாம்பு திரச்சராஜி: என்று ஸர்ப்பாஹுதிக்கு ஏற்ற வகையில் அவர் பொருள் காட்டிடுகிறார்.

ஸ்ரீஸாயணாசார்யர் திரச்சீனா: கடகவலயாகாரா: ராஜயோ ரேகா: யஸ்ய ஸர்ப்பஸ்யாஸௌ திரச்சராஜி: என்கிறார்.எந்த பாம்பிற்கு உடலிலே பக்கவாட்டிலே கங்கணம், வளையல் போன்ற ரேகைகள் உள்ளனவோ அது திரச்சராஜி: என்கிறார்.

பரமைகாந்திகளான நாம் உதகசாந்தி ஜபம் செய்கையில் திரச்சராஜி: என்ற இச் சொல் தன் மா பெரும் உடலில் பக்கவாட்டில் வரைந்த ரேகைகள் போலத் திகழும் கங்கை யமுனை ஸிந்து ப்ரஹ்மபுத்ரா போன்ற நதிகளை உடைய இமயமலையை - திரச்சராஜி: என்ற சொல் மூலம் வேதத்தாழ்வான் குறிப்பதாக அனுபவிக்கலாமே. ராஜிரிவ ராஜி: எனப் புரிந்து கொண்டு ராஜி போல் இருக்கிற கங்கை முதலிய நதிகளை ராஜி: என்ற சொல்லே சொல்வதாகக் கொள்ள வேண்டும். அவைகளைத் தன் பக்க வாட்டில் கொண்ட மலை இமயமலை என்று கொள்ள வேண்டும்.மேலிருந்து கீழே வரும் கோடு போல ஒவ்வோர் நதியும் இருப்பினும் மொத்தத்தில் வெவ்வேறு பக்கத்திலே அவைகள் பாய்வதால் இமயமலைக்குப் பக்க வாட்டிலே வரைந்த கோடுகள் போல அவைகளைக் கற்பனை செய்து கொள்ளுகிறோம்.

அல்லது மஹாகவி காளிதாஸன் உத்ப்ரேக்ஷை செய்தது போல பூமியை அளக்க அதன் மீது படிய வைத்த அளவு கோலைப் போல இருக்கும் இமயமலை ஒரு திரச்சராஜி: அளவு கோலின் மீது பக்கவாட்டிலே வரைந்த அளவைக் காட்டும் ரேகைகள் இருக்குமல்லவா?

இந்த உத்ப்ரேக்ஷை காளிதாஸனின் குமார ஸம்பவத்தின் முதல் ச்லோகத்திலேயே உள்ளது. இந்த ச்லோகம் மிகவும் ப்ரஸித்தமானதே என்றாலும் அதன் முழு வடிவத்தையும் நீங்கள் உடனேயே அனுபவிக்க வய்ப்பாக இங்கே தருகிறேன்.

அஸ்த்யுத்தரஸ்யாம் திசி தேவதாத்மா ஹிமாலயோ நாம நகாதிராஜ:
பூர்வோத்தரௌ தோயநதீவகாஹ்ய ஸ்தித: ப்ருதிவ்யா இவ மானதண்ட:

இதன் பொருள்:- வடதிசையிலே இமய மலை என்றொரு மலையரசன் உண்டு. இது 'ஸேயம் தேவதா ஐக்ஷத' என்று சாந்தோக்யம் குறிப்பிடுவது போலப் பர தேவதையான நாராயணனைத் தனது அந்தராத்மா ஆக உடையது. அது கீழை மற்றும் மேலைக் கடல்களைத் தீண்டிக் கொண்டு பூமியினை அளக்க அதன் மீது வைக்கப் பட்ட அளவு கோலைப் போல இருக்கிறது.

இத்தகைய திரச்சராஜியான இமயமலையே வட திசைக்குக் காவலன் என்கிறான் வேதத்தாழ்வான். ஆம் பதரீ நராயணன் எழுந்தருளி திருமலையே நமக்குப் பாதுகாப்பு என்கிறான் என்ற படி. இமய மலையையும் அதாவது இமவானையும் ஒரு தேவதையாக வேதம் சொல்கிறது.

'ஹிமவதோ கஸ்தீ' என்று இதே ஸம்ஹிதையில் இதே ப்ரச்னத்தில் அச்வமேத வேள்வியில் இமயமலை ஆகிய மலையரசனாம் இமவான் என்கிற தேவதைக்கு பலியாக யானையை ஸமர்ப்பிக்க வேண்டும் என்று சொல்லப் படுகிறது.

காளிதாஸனும் குமார ஸம்பவத்தில் முதல் ஸர்கத்தில் 17-ஆவது ச்லோகத்தில்

யஜ்ஞாக்யயோனித்வமவேக்ஷ்ய யஸ்ய ஸாரம் தரித்ரீதரணக்ஷமம் ச
ப்ரஜாபதி: கல்பிதயஜ்ஞபாகம் சைலாதிபத்யம் ஸ்வயமன்வதிஷ்டத்

என்று கூறுவதை நோக்குங்கள்.

இதற்கு மல்லிநாதருடைய வ்யாக்யானத்தைப் பாருங்கள். யாகத்திற்குத் தேவையான ஸோமக் கொடி முதலிய பல பொருள்கள் தோன்றும் இடமாக இமயமலை இருப்பதையும், பூமியைத் தாங்கும் வலிமையையும் நோக்கி ப்ரஹ்மதேவன் அவனுக்கு வேள்வியில் ஸமர்ப்பிக்கும் பொருள்களில் பங்கைப் பெறும் தேவதையாகிய தன்மையைத் தானே அவனுக்கு அளித்தான் என்பது.

அப்படி வேள்வியில் பாகம் பெறும் இமவான் என்கிற தேவதையை இங்கு வடதிசைக் காவலனாக நிச்சயமாகப் பரமைகாந்திகளான நாம் புரிந்து கொள்ள வாய்ப்பு இல்லை.

அப்படி ஆயின் அந்த இமவானாகிய தேவதையின் அந்தர்யாமியான பகவானைக் காவலனாகக் கொள்ள வேண்டுமா என்றால் அந்த அந்தர்யாமி ஸ்வரூபத்தை நம் போன்றவர்கள் எப்படி த்யானம் செய்வது? பின் எப்படித் தான் புரிந்து கொள்வது?

திருமங்கையாழ்வார், "நாங்கூர் மணிமாடக் கோயில் வணங்கு என் மனனே!'', "வைகுந்த விண்ணகரம் வணங்கு மடநெஞ்சே!'', "அரிமேய விண்ணகரம் வணங்கு மடநெஞ்சே!'', "மாலிருஞ்சோலை வணங்குதும் வா மடநெஞ்சே!'' என்றெல்லாம் பாடுகிறார்.

"எம்பார் விடிவோறே அனுஸந்திக்கும் பாட்டு" என்றே ப்ரஸித்தமான - "பழுதொன்றும் வாராத வண்ணமே விண்கொடுக்கும் மண்ணளந்த சீரான் திருவேங்கடம்'' என்ற பாசுரத்தில் திரு வேங்கடமலையே மோக்ஷம் தரும் என்று பொய்கையாழ்வார் பாடுகிறார்.

நம்மாழ்வார் கிளரொளியில், "மாலிருஞ்சோலை தொழக்கருதுவதே துணிவது சூதே" என்றும் ஒழிவில்காலத்தில்', "திருவேஙகட மாமலை ஒன்றுமே தொழ நம்வினை ஓயுமே" என்றெல்லாம் திவ்யதேசங்களையே வணங்க உரியவையாய் மோக்ஷம் தருபவைக்களாக வருணித்துள்ளார்கள். அதற்குச் சுவை நிறைந்த பல பொருள்களை எல்லாம் நம் பூர்வாசார்யார்கள் நமக்கருளி நம்மை இன்ப வெள்ளத்திலே மூழ்க வைத்துள்ளனர். என்றாலும் உண்மை நிலை அதாவது வஸ்து ஸ்திதி என்ன? அந்த திவ்ய தோசங்களிலே திகழும் அர்ச்சா மூர்த்திகளைத் தானே பரவிடுகின்றனர்.

அது போலவே வேதத்தாழ்வான் திரச்சராஜியான இமயத்தை- இமவானைக் காவலனாகச் சொல்கையில் அங்கு அர்ச்சையாகத் திகழும் பதரீநாராயணனையே காவலனாக

மங்களாசாஸனம் செய்கிறான். அதாவது அவஸ்தாவா எனப் புகழ் பெற்ற வடதிசைக்கு வருணன் ஆகிற பதரீநாராயணன் அதிபதி காவலன். திரச்சராஜியான இமயம் அதாவது இமயத்துள் எம் ஈசன் ஆன பதரீ நாராயணனே.

இனிச் சென்ற மந்திரத்தினில் போலவே “ யச்சாதிபதிர்யச்ச கோப்தா தாப்யாம் நமஸ்தௌ நோ ம்ருடயதாம்”என்ற பகுதியை “(அத்தகைய வட திசையே! உன்னுடைய) அதிபதியும் காவலனும் ஆன அவர்கள் இருவருக்கும் வணக்கம்; அவர்கள் இருவரும் எங்களுக்கு இன்பம் அளித்திட வேண்டும்” என்று புரிந்து கொள்ளலாம்.

“தே யம் த்விஷ்மோ யச்ச நோ த்வேஷ்டி தம் வாம் ஜம்பே ததாமி” என்றுள்ள நிறைவுப் பகுதியை “இப்படி உங்களால் இன்பம் பெற்ற அடியோங்கள் எங்களை வெறுத்துச் சிதைக்கும் எதிரியான (மூலத்திலே உள்ள தம் என்ற படர்க்கை ஆண்பால் சொல்லுக்கு ஏற்றபடி இங்கு பாபத்தைக் குறிக்கப் பாப்மா என்று ஆண்பால் சொல்லை வரவழைத்துக் கொள்கிறோம்) பாபத்தையும் அடியோங்கள் சிதைக்க விரும்பும் எதிரியான (பாப்மா என்று ஆண்பால் சொல்லாலே வழங்கப் படும்) பாபத்தையும் உங்கள் இருவர் திரு மோவாய்களில் (உங்களுக்கு உணவாக) இடுகிறோம்” என்று புரிந்து கொண்டு சுவைக்கலாம். இங்கு அதிபதியும் காவலனும் ஒரே பதரீ நாராயணனே என்றாலும் அதிபதி காவலன் என்ற அடிப்படையிலே இரு வேறு நிலையைக் கருதி இருவராக வேதத்தாழ்வான் குறிப்பிடுகிறான்.

உங்களுக்கு உணவாக இடுவது என்பதற்கான விளக்கத்தைச் சென்ற மந்திரத்தின் விரிவுரையிலே தந்திருக்கிறோம்.

இதனைக் கைத்என்பார்

Thou art the northern quarter, the stable by name;
of thee as such Varuna is overlord,
the striped snake, &c. the overlord and the guardian, to them
Homage; may they be gentle to us; him whom we hate and who hateth us I place
Within the jaws of you two.

என மொழி பெயர்த்துப் போந்தார்.

நாம் இதனை நமக்குப் பாங்காக

Thou art the northern quarter, the stable by name;
of thee as such Badaree Narayana is overlord,
the striped Scale like- The Himalaya . the overlord and the guardian, to them
Homage; may they be gentle to us; him whom we hate we mean our sin and
who hateth us again we mean our sins I place within the jaws of you two.

என மாற்றி அனுஸந்தித்து மகிழலாம். இங்கு இலவச இணைப்பாக அடியேன் திருத்தகப்பனார் அருளிய திவ்யதேசவைபவ ஸ்துதியில்

பதரிகாச்ரமே தப்தகுண்டவத்யலகநந்தயா தப்தகாஞ்சனே
நரவிலோகிதோ நீலபட்டயோர்வசனகோசரோ ராஜதேதராம்
என்ற ச்லோகத்தின் மூலம் அதிபதியான பதரீநாராயணனையும்
மஹாலக்ஷ்ம்யா ஸமேதோயம் அரவிந்தலதாக்யயா
நாராயணோ மஹாயோகீ நாரதாதிநுதோவது

என்று கோப்தாவான பதரீநாராயணனையும் பரவி வணங்கி மகிழ்வோம்.

# வைணவத் தூண் ஒன்று சாய்ந்ததே

ஸ்ரீ உ.வே. **Dr.M.A.**வேங்கடக்ருஷ்ணன் ஸ்வாமி

மண்டயம் அனந்தாண்பிள்ளை லக்ஷ்மீதாதாசார்ய (MAL) ஸ்வாமியின் தாயாரும் அடியேனுடைய தாயாரும் உடன்பிறந்த சகோதரிகள். அடியேனும் மண்டயம் அனந்தாண்பிள்ளை திருவம்சத்தைச் சேர்ந்தவனாதலால் தகப்பனார் வழியிலும் அவர் (தாயாதி) சகோதரர் ஆவார். அடியேனுடைய உறவினர்களிலேயே மிக நெருங்கிய தொடர்பு இவரிடம்தான் அடியேனுக்கு இருந்தது. சிறு வயது முதலே பல விஷயங்களில் அடியேனுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தவர் அவர்.

அடியேனுடைய தாயார் அடியேனைத் தம்முடைய கர்ப்பத்தில் கொண்டிருந்தபோது சில மாதங்கள் திருநாராயணபுரத்தில் தம்முடைய சகோதரியின் (லக்ஷ்மீதாதாசார்யரின் தாயாரின்) இல்லத்தில் தங்கியிருந்தாராம். அப்போது லக்ஷ்மீதாதாசார்யரின் தகப்பனாரான பண்டிதராஜர் ஸ்ரீ உ.வே. ஆழ்வார் திருமலை ஐயங்கார் ஸ்வாமி அடியேனுடைய தாயாரை தினந்தோறும் கல்யாணி புஷ்கரிணியில் நீராடி புஷ்கரிணியையும் ஞானாச்வத்த மரத்தையும் ஞானப்பிரானையும் பிரதக்ஷிணங்கள் செய்து மலைமேல் எழுந்தருளியுள்ள நரசிம்மரையும் சேவித்துவிட்டு வரும்படி நியமித்தாராம். அப்படியே அடியேனுடைய தாயாரும் தினந்தோறும் செய்து விட்டு இல்லம் திரும்பி ஸ்ரீ உ.வே. ஆழ்வார் திருமலை ஐயங்கார் ஸ்வாமி ஸாதித்து வந்த பகவத் விஷய காலக்ஷேபத்தில் அந்வயித்துவிட்டு அதற்குப் பிறகே உணவு உட்கொள்வாராம். இப்படிச் சில மாதங்கள் சென்றபிறகே அடியேன் பிறந்ததனால்தான் அடியேனுக்கு ஸம்ப்ரதாய விஷயங்களில் இவ்வளவு ஈடுபாடு ஏற்பட்டது என்று லக்ஷ்மீதாதாசார்யர் அடிக்கடி சொல்லுவார்.

ஸ்வாமி தமது இளமைப் பருவத்தில் மேல்படிப்பிற்காகச் சென்னை வந்தபோது திருவல்லிக்கேணியில் சில வருடங்கள் தங்கியிருந்தார். அப்போது அவர் திருவல்லிக்கேணி யிலிருந்த சிறுவர்களையெல்லாம் திரட்டி ஸம்ஸ்க்ருதம் கற்றுக் கொடுக்கத் தொடங்கினார். சிறுவனாக இருந்த அடியேன் அப்போது அவரிடம் ஸம்ஸ்க்ருத அக்ஷரங்கள் முதல் கற்றுக் கொள்ளத் தொடங்கினேன். இப்படியாக முதன்முதலில் ஸம்ஸக்ருதத்தில் அடியேனுக்குப் பரிசயத்தை ஏற்படுத்தி வைத்தவர் அவர்தான். அதனால் அடியேன் பத்தாம் வகுப்பில் படிக்கும்போது ஸம்ஸ்க்ருதத்தையே சிறப்புப் பாடமாக எடுத்துக் கொண்டு படிக்கும் ஆர்வம் ஏற்பட்டது. அவர் சென்னையில் அமைந்துள்ள விவேகாநந்தா கல்லூரியில் எம்.ஏ. ஸம்ஸ்க்ருதம் படித்து முதல் மாணவராகத் தேறி தங்கப் பதக்கங்களும் பெற்றார். அப்போது ஸ்ரீ உ.வே. காரப்பங்காடு வேங்கடாசார்யர் ஸ்வாமியிடம் ஸ்ரீபாஷ்ய பகவத்விஷய காலக்ஷேபமும் செய்தார். பிறகு தம்முடைய ஊர் திரும்பியதும் அவர் பெங்களூர் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றத் தொடங்கினார். அப்போதும் தம்முடைய வைதிக அநுஷ்டானங்களை விடாமல் திருமண் குடுமி பஞ்சகச்சம் (ஜிப்பா) இவற்றுடனே அவர் பல்கலைக் கழகத்திற்குச் செல்வார்.

அவருடைய அடிச்சுவட்டையே பற்றி அடியேனும் அதே கல்லூரியில் பி.ஏ. மற்றும் எம்.ஏ. வகுப்புகளில் ஸம்ஸ்க்ருதத்தையே சிறப்பு பாடமாகக் கொண்டு படித்தேன். பேராசிரியர் ப்ரம்மஸ்ரீ வி. ராஜகோபாலன் அவர்கள் அப்போது ஸம்ஸ்க்ருதத் துறையின் தலைமைப் பேராசிரியராக இருந்தார். அவர் ஸ்வாமியின் கடும் உழைப்பு திறமை முதலியவற்றை மனந்திறந்து அடியேனிடம் பாராட்டிக்கூறி அவரைப் போலவே நானும் வரவேண்டும் என்று கூறுவார். அடியேன் ஸம்ஸ்க்ருதத்தில் எம்.ஏ. பட்டம் பெற்ற உடனேயே அடியேனைப் பேராசிரியர் ராஜகோபாலன் அந்தக் கல்லூரியிலேயே உதவிப் பேராசிரியராக நியமித்து விட்டார். அடியேனும் லக்ஷ்மீதாதாசார்யரையே முன்மாதிரியாகக் கொண்டு திருமண் குடுமி பஞ்சகச்சம் (ஜிப்பா) இவற்றுடனே கல்லூரிக்குச் சென்று கொண்டிருந்தேன். லக்ஷ்மீதாதாசார்யருடைய இரட்டைப் பிறவி போலவே இருப்பதாக அடிக்கடி அப்பேராசிரியர் கூறியது இன்றும் என் நினைவில் இருக்கிறது.

ஸ்வாமி பெங்களூர் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தாலும் தம்முடைய ஊரான திருநாராயணபுரத்தில் மிகச்சிறந்த ஸம்ஸ்க்ருத ஸ்தாபனம் ஒன்றை ஏற்படுத்தவேண்டும் என்ற பெருங்கனவுடன் இருந்தார். அந்த ஸ்தாபனம் எப்படி இருக்க வேண்டும் அதற்கு எவ்வாறு கட்டிடங்கள் கட்டப்படவேண்டும் அதில் என்னென்ன செய்ய வேண்டும் என்பதையெல்லாம் வரைபடங்களாகத் தயாரித்து அனைவரிடமும் காட்டிக் கொண்டிருந்தார். அது திருநாராயணபுரத்தில் அமைய வேண்டிய இடத்தையும் தேர்ந்தெடுத்துவிட்டார். ஒருமுறை அடியேன் திருநாராயணபுரத்திற்குச் சென்றிருந்தபோது அடியேனை அந்த இடத்திற்கு அழைத்துச் சென்று சுற்றிக் காட்டினார். அந்த இடம் மிகவும் மேடு பள்ளங்களை உடையதாகவும் நடந்து செல்வதற்குக் கூட முடியாதபடி கரடு முரடாகவும் இருந்தது. அந்த இடத்தில் எப்படி ஒரு ஸ்தாபனத்தை அமைக்க முடியும் என்றுதான் அடியேன் நினைத்தேன். ஆனால் ஸ்வாமிக்கோ அந்த இடத்தை சுற்றிக் காட்டும்போதே கண்களில் பெரிய கனவு விரிந்தது. சில ஆண்டுகள் கழிந்து மீண்டும் அவ்வூருக்குச் சென்றபோது அந்த இடத்திற்கு மறுபடியும் அழைத்துச் சென்றார். என்ன வியப்பு! கரடு முரடாக இருந்த நிலம் சமமாகப் பண்படுத்தப்பட்டு அதில் ஒரு சிறிய கட்டிடமும் எழுப்பட்டிருந்தது. அதில் ஸம்ஸக்ருத ஆராய்ச்சிக் கழகம் என்ற ஸ்தாபனமும் சிறிது சிறிதாகச் செயல்படத் தொடங்கியிருந்தது. வருடங்கள் செல்லச் செல்ல அந்த ஸ்தாபனம் மிக வேகமாக வளர்ந்து உலகமெல்லாம் புகழ் பரப்பியது என்றால் அதற்கு முழுமுதற்காரணம் ஸ்வாமியின் தன்னலமற்ற உழைப்பும் தீர்க்கதரிசனமுமேயாகும்.

இதேபோல் சென்னையிலும் ஏதாவது அடியேன் செய்ய வேண்டும் என்று அடிக்கடி அறிவுறுத்திக் கொண்டிருப்பார். ஆனால் அவரைப்போல ஒரு ஸ்தாபனத்தை உருவாக்குவதற்குரிய ஆற்றல் அடியேனுக்குக் கிடையாது என்றும் கர்நாடக அரசாங்கம் இதுபோன்ற ஸ்தாபனங்களுக்குக் கொடுக்கும் ஒத்துழைப்பையும் உதவிகளையும் தமிழ்நாட்டில் பெறுவது மிகக் கடினம் என்றும் அடியேன் கூறினேன். ஆனால் பகவானுடைய ஸங்கல்பத்தால் 1984ம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தில் வைணவத்துறை தொடங்கப் பெற்றது. அதற்கு முக்கியப் பங்கு வகித்த மூத்த வழக்கறிஞர் ஸ்ரீமான் என்.ஸி.

ராகவாசாரியர் அத்துறையில் சேர்ந்து அதனை வளர்க்க வேண்டும் என்று அடியேனைக் கேட்டுக் கொண்டார். அதற்கிணங்க அடியேன் விவேகாநந்தா கல்லூரியை விட்டு சென்னைப் பல்கலைக் கழக வைணவத்துறையில் பேராசிரியராகச் சேர்ந்தேன். அத்துறையின் தலைமைப் பேராசிரியரான நரசிம்மாசாரியர் அடியேனிடமே முழுப்பொறுப்பை வழங்கியபடியால் வைணவத்துறையின் முழுவளர்ச்சிக்குக் காரணமாகப் பெரும்பங்காற்றும் வாய்ப்பு அடியேனுக்குக் கிட்டியது. அதில் பாடத்திட்டங்கள் வகுப்பது, ஆராய்ச்சிப் படிப்புகள் மேற்கொள்வது, கருத்தரங்குகள் நடத்துவது போன்ற பல விஷயங்களில் லக்ஷ்மீதாதாசார்யர் அடியேனுக்கு வழிகாட்டினார். பல கருத்தரங்குகளில் அவரே நேரிலும் கலந்து கொண்டு சிறப்பித்தார். இப்படி சென்னைப்பல்கலைக்கழக வைணவத்துறையில் அடியேன் ஆற்றிய பணிகளுக்கும் அவரே அதன் தொடக்கம் முதல் வழிகாட்டியாக விளங்கினார்.

மிகவும் வைதிகமான அனுஷ்டானங்களைக் கொண்டிருந்த அவர் கணினித் துறையில் பெற்றிருந்த ஞானம் அபாரமானது. அவருடைய ஆலோசனைகளினால் தான் அடியேனுக்கும் கணினிகள் மூலமாகவே புத்தகங்கள் வெளியிடும் ஆர்வமும் பயிற்சியும் ஏற்பட்டன. அவ்வப்பொழுது புதிதுபுதிதாக வந்துள்ள முன்னேற்றங்களை அடியேனுக்குத் தெரிவித்து அவற்றையும் அடியேன் பழகிக் கொள்ளும்படி செய்தார்.

மேலக்கோட்டை ஸம்ஸ்க்ருத ஆராய்ச்சிக் கழகத்தின் சார்பில் பல பல ஆராய்ச்சி நூல்களை அவர் வெளியிட்டுள்ளார். அடியேனையும் அதுபோல் நூல்கள் வெளியிடும்படி ஆராய்ச்சிகள் கூறினார். அதற்குப் பல்கலைக்கழக மானியக் குழுவின் உதவிகளைப் பெறுவது எப்படி என்றும் ஆலோசனைகள் வழங்கினார். அதில் உருவானதுதான் வைணவ ஆசார்யர்களின் வாழ்வும் வாக்கும் என்ற நூல். தொடர்ந்து அடியேன் ஓலைச் சுவடிகளில் இருந்த நூல்களை முதன்முதலில் புத்தகமாக வெளியிடுவதற்கு முயற்சி செய்தபோது அதற்கும் பல உதவிகள் புரிந்தார். பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த (ஸம்ஸ்க்ருத) தத்த்வவிவேகம், நம்பிள்ளை அருளிச்செய்த இயற்பா வியாக்கியானம் ஆகியவற்றின் ஓலைப்பிரதிகள் மேலக்கோட்டை ஸம்ஸ்க்ருத ஆராய்ச்சிக் கழகத்தின் நூலகத்திலும் இருந்தன. அவற்றைப் பிரதி எடுத்துக் கொள்வதற்குப் பல உதவிகளை அவர் செய்தார். அவருடைய ஒத்துழைப்பாலும் ஆலோசனைகளாலும்தான் அந்த நூல்கள் முதன்முறையாக அடியேனால் வெளியிடப் பெற்றன.

தொன்மைக் காலம் முதல் தற்காலம் வரை மேலக்கோட்டை திருநாராயணபுரத்தின் வரலாற்றை Melukote through the ages என்ற பெயரில் மிகப்பெரிய ஆராய்ச்சிப் புத்தகமாக அவர் வெளியிட்டுள்ளார். அதேபோல் அடியேனும் Tiruvallikkeni through the ages என்ற புத்தகம் வெளியிடவேண்டும் என்று அடியேனுக்கு அடிக்கடி கூறிவந்தார். திருவல்லிக்கேணியிலுள்ள வழிபாட்டுத் தலங்கள், திருமடங்கள், பஜனைமடங்கள், கல்வி ஸ்தாபனங்கள், கலை இலக்கிய மன்றங்கள், இங்குப் பிறந்த பிரபலஸ்தர்கள் என்று பல வரலாறுகளையும் திரட்டி ஒரு புத்தகம் வெளியிட வேண்டும் என்று ஆலோசனைகளும் வழங்கினார். ஆனால் அதற்கு ஆரம்ப முயற்சிகளை மேற்கொண்டேனே தவிர அவரைப் போல் புத்தகமாக வெளியிடும் வாய்ப்பு இன்னமும் ஏற்படாமலே இருக்கின்றது. என்னதான்

அவரை வழிகாட்டியாகக் கொண்டாலும் அவரைப்போல எல்லாவற்றையும் செய்து விட முடியாது என்பதற்கு இதுவே உதாரணமாகும். எண்பது வயதைக் கடந்த பின்னரும் இளைஞர்போல் சுறுசுறுப்புடன் பல்வேறு ஆக்கபூர்வமான செயல்களில் ஈடுபட்டு வந்தார். ஒவ்வொரு மாதமும் சிலநாள்கள் திருநாராயணபுரத்திலிருந்து ஸ்ரீரங்கம் வந்து தங்கி அங்கு பகவத்விஷய காலக்ஷேபம் ஸாதித்து வந்தார்.

ஜனாதிபதி விருது உட்பட மிகப்பெரிய விருதுகளைப் பெற்று அறிஞர்களாலேயே கொண்டாடப்பெற்ற பெருமை உடையவராக இருந்தபோதும் சிறிதும் கர்வம் கொள்ளாமல் அனைவரிடமும் எளிமையாகப் பழகுவார். சிறு குழந்தைகளிடமும் மிக இயல்பாகப் பேசுவார்.

தற்காலத்தில் அவரவர்கள் தங்களுக்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் வாங்குவதற்கு என்று மிகப் பெரும் கடைகளுக்குச் செல்கிறார்கள். அங்கு கிடைக்காத பொருளே இல்லை. அதற்கு MALL என்று பெயர் வைத்திருக்கிறார்கள். அதுபோல எந்த விஷயத்தில் ஸந்தேகம் ஏற்பட்டாலும் அதைத் தீர்த்துக் கொள்ள நாம் அணுகக் கூடியவர் MAL ஸ்வாமி. அவருக்குத் தெரியாத விஷயங்களே கிடையாது. மரம் செடி கொடிகளைப் பற்றிய வ்ருக்ஷ சாஸ்த்ரம், குதிரைகள் மாடுகள் பற்றிய ம்ருக சாஸ்த்ரம், ஆயுர்வேத மருந்துகள் பற்றிய வைத்ய சாஸ்த்ரம், ஆஹார சாஸ்த்ரம், ஓலைச்சுவடிகள், நவீனக் கணினிகள், விஞ்ஞான முன்னேற்றங்கள் இவற்றைப் பற்றிய விவரங்கள் அனைத்தும் அவருக்கு விரல் நுனியில் இருந்தன. எப்போது எந்த விஷயத்தைப் பேச வேண்டுமானாலும் அவற்றை தமிழ், கன்னடம், ஸம்ஸ்க்ருதம், ஆங்கிலம் என்று எந்த பாஷையிலும் மிகவும் ஸரளமாகப் பேச வல்லவர். இன்னும் அவருடைய திறமைகளையும் சாதனைகளையும் சொல்லிக் கொண்டே போகலாம். அப்படிப்பட்ட பெருமை பெற்றவர் 15–5–2021 அன்று தம்முடைய 85ம் வயதில் திருநாடலங்கரித்து விட்டார். அவருடைய மறைவு ஸ்ரீவைஷ்ணவஸம்ப்ரதாயத்திற்கு மட்டுமல்ல உலகிற்கே பேரிழப்பாகும்.

நன்றி: வைணவன் குரல்



*(தலைமை), போக்யத்வம் (இனிமை) முதலியவை குறைவற்ற திருவடிகளை முதலில் பற்றினார். 'அரங்கத்தம்மான்' என்றதால் ஶேஷித்வமும் (தலைமைஸயும்), 'கமலம்' என்றதால் போக்யத்வமும் (இனிமைமையும்) 'பாதம்' என்றதால் உபாயத்வமும் (ஆறும்) சொல்லப்பட்டது. பெரியாழ்வாரும் ''திருப்பாதகேசத்தை'' என்று அருளிச்செய்துள்ளபடி ''சீதக்கடலுள்'' (பெரியாழ்வார் திருமொழி 1.2) பதிகத்தில் திருவடிகள் முதலாக திருமுடியளவும் அனுபவித்தது போல இவரும் 'இருளகற்றும் எரிகதிரோன் மண்டலத்தூடு ஏற்றி வைத்து ஏணி வாங்கும்' பெரிய பெருமாளுடைய திருமேனியைத் திருப்பாதம் முதல் கேசம் வரை அனுபவித்து, அந்த அனுபவத்தால் உண்டான மகிழ்ச்சியினால் தாம் பத்தும் பத்தாக (முழுவதுமாக) அனுபவித்தபடியை 'அமலனாதிபிரான்' என்கிற திவ்யப்ரபந்தத்தைப் பிற்பட்டவர்களும் அனுஸந்தித்து உய்வு பெறும்படி உபகாரம் செய்து உலகை வாழ்வித்தருளினார். பெரிய பெருமாளும் குருவேர் முதலியற்றைச் சூடிக் கொள்பவர்கள் அதன் மணம் குறைந்து விடக்கூடாது என்பதற்காக மண்ணோடு சேர்த்து அதனைச் சூட்டிக் கொள்வது போல திருப்பாணாழ்வாரை அவருடைய திருமேனியோடு சேர்த்து ஏற்றுக் கொள்ள, ஆழ்வாரும் அனைவரும் காணும்படி அணியரங்கன் திருவடிகளில் மறைந்துவிட்டார்.*

**திருமங்கையாழ்வார் வைபவம்**

*பரகாலஹரிம் வந்தே ஹரிபாதகுஹாஶயம்*
*உந்நதப்ரதிகூலேபகும்பஸம்பேத விப்ரமம்*
*நாதப்ரஸபஸந்த்ரஸ்த ஶைவஶாக்யாதிதுாத்விபம்*
*பரகாலம்ருகேந்த்ரந்த்வாம் ப்ரபத்யேச்யுதவந்திநம்*

*(பரமபுருஷனுடைய திருவடிகளாகிற குஹையிலே சயனித்திருப்பவரும் மதங் கொண்ட புறச்சமயிகளாகிற யானைகளின் மத்தகத்தைப் பிளப்பதை விளயாட்டாகக் கொண்டவருமான பரகாலர் என்னும் (திருமங்கையாழ்வாராகிய) சிங்கத்தைத் தொழுகிறேன். சைவர், பௌத்தர் முதலானவராகிய தீய யானைகளைத் தன் கர்ஜனையால் மிகவும் பயப்படச் செய்தவராய், அச்சுதனையே தொழுமவரான பரகால சிங்கமாகிற உம்மை ஶரணமடைகிறேன்.)*

*ஸுதாகநாப்தாநாம் கலியுகபவாநாமபகமே*
*நளேவர்ஷே மாஸே ஶரதி சரமே தைவத்குரோ:*
*திநே தாலே வஹ்நேஶ்ஶிஶிரகிரணே பூர்ணிமஜுஷி*
*க்ஷிதாவாவிர்பூத: கலிரிபுரமேயாத்ம மஹிமா*

*(கலியுகத்தில் 'ஸுதாகாந' என்பதால் (கடபயாதி எண்ணிக்கைப்படி) கிடைத்த முந்நூற்றுத் தொண்ணூற்றேழு வருஷங்கள் சென்றபின் நள வருஷத்தில், சரத்ருதுவில் இரண்டாவதான கார்த்திகை மாதத்தில், வியாழக்கிழமையில், அக்னியின் நட்சத்திரமான கார்த்திகை நட்சத்திரத்தில், சந்திரன் நிறைந்து விளங்கும் பௌர்ணமியில், அளத்தற்கரிய பெருமையை உடைய கலிகன்றியான திருமங்கையாழ்வார் இவ்வுலகில் அவதரித்தார்.)*

*திருமங்கையாழ்வார் திருவாலி திருநகரியிலே திருக்குறையலூரில் நளவருஷம் கார்த்திகைமாதம் கார்த்திகை நட்சத்திரத்தில் ஸ்ரீகார்முக அம்ஶராய் அவதரித்தருளினார். கள்ளர்குலத்தில் பிறந்தபடியினால் நீல நிறத்தை உடையவர் என்ற பொருளில் நீலன் என்று பெயரிட்டனர். ''ஸமஜாயத தத்ர ஶாபரப்ரமுக: கஶ்சந நீலநாமக: புருஷோத்தம கார்முகாம்சஜஸ் ஸ்புரிதே கார்த்திகக்ருத்திகோடுநி'' (அந்தத் திருக்குறையலூரில், கள்ளர்*

*தலைவராய், புருஷோத்தமனின் சார்ங்கம் எனும் வில்லின் அம்சமாயிருப்பவராய், நீலன் என்னும் திருநாமத்தை உடையவராயன திருமங்கையாழ்வார் விளங்காநிற்கும் கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நக்ஷத்ரத்தில் அவதரித்தார்.) என்று திவ்யஸூரிசரிதத்தில் (7.34) கூறப்பட்டுள்ளது.*

*''தெரியேன் பாலகனாய்'' என்றபடி இளமைப்பருவத்தை அடைந்தவர் ''மாரனார் வரிவெஞ்சிலைக்காட்செய்து'' என்றும் ''தெரிவைமார் உருவமே மருவி'' என்றும் கூறப்பட்டுள்ளபடி சிற்றின்பங்களில் ஈடுபட்டிருந்தார். தம்முடைய கையில் ஆயுதம் ஏந்திப் போர்புரிவதில் வல்லவராய், சோழ அரசனை வணங்கி, அவனுடைய படைவீரராகி போர்களிலும் வென்றார். (தமக்கு உதவி புரிவதற்கு நீர்மேல் நடப்பான், நிழலில் ஒதுங்குவான், தாளூதுவான், தோலாவழக்கன் என்ற நான்கு அமைச்சர்களையும், ஆடல்மா என்ற குதிரையையும், கடமாகளியானை என்கின்ற யானையையும் கொண்டிருந்தார்.) இப்படி இருக்கின்ற இவரை சோழ அரசனும் ஒரு நாட்டிற்கு அதிபதியாக்கி, படைத்தலைவராகவும் ஆக்கிவைத்தான்.*

*திருவாலி நாட்டில் நன்றாக இருப்பதான ஒரு தடத்தவிழ் தாமரைப் பொய்கையில் சில அப்ஸரஸ்ஸுக்கள் வந்து தினந்தோறும் நீராடிச் சென்று கொண்டிருந்தார்கள். அவர்களில் திருமாமகள் என்பவள் குமுதமலரைப் பறித்துக் கொண்டிருந்தபடியால் மற்ற அப்ஸரஸ்ஸுக்கள் இவளை இங்கேயே விட்டு விட்டு தேவலோகம் சென்று விட்டார்கள். திருமாமகளும் மனித உடலுடன் அங்கேயே தனியாக நின்றாள். அப்போது திருநாங்கூரில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை ஸேவிப்பதற்காக வந்த மருத்துவனான அடியவன் ஒருவன் நீராடுவதற்காக அப்பொய்கைக்கு வந்தான். அங்கே இவளை கண்டு ''நீயார்? ஏன் தனியாக நிற்கிறாய்?'' என்று கேட்டான். அவளும் ''என்னுடன் கூடவந்தவர்கள் என்னை விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். (ஸ்ரீமந்நராயணனுடைய அம்சமாகப் பிறந்தவரான கபிலாசார்யர் என்னைக் கோபித்து சபித்தபடியால் மானிட உடலுடன், தேவலோகத்திற்குப் போவதற்குச் சக்தி இல்லாதவளாக இருக்கிறேன்'' என்றாள். அந்த மருத்துவன் ''அந்த நிகழ்ச்சி என்ன என்று சொல்'' என்று கேட்க, ''அடியேன் ஸுமங்களை என்கிற பெயரை உடைய அப்ஸரஸ்ஸு. மற்ற அப்ஸரஸ்ஸுக்களுக்கெல்லாம் தலைவியாய் அழகிய உருவத்துடன் திரிந்து கொண்டிருந்தேன். ஒருநாள் இமயமலையிலுள்ள சிறப்புகளையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தபோது ஒரு ஸித்தாஶ்ரமத்தில் கபிலாசார்யர் மற்ற முனிவர்களுக்கு பகவானின் பெருமைகளைக் கூறிக் கொண்டிருந்தார். அப்போது நான் அங்கு மிகவும் அழகில்லாமல் இருந்த ஒரு ஸித்தபுருஷனைப் பார்த்து ஏளனம் செய்துவிட்டேன். அதைக் கண்ட கபிலர் ''நீ மானிடப் பெண்ணாகப் பிறந்து ஒரு தாழ்ந்தவனுக்கு மனைவி ஆகக் கடவாய்'' என்று சபித்து விட்டார். நான் மிகவும் வருத்தத்துடன் அவரை வேண்ட அவரும் மகிழ்ந்து, ''பெண்ணே! உலகைக் காக்கும் பொருட்டு என்னுடைய (பகவானுடைய) சார்ங்கம் என்ற வில்லின் அம்சமாக பரகாலன் என்பவர் அவதரித்து அரசாள்கிறார். அவருக்கு மனைவியாக நீ சென்று அவரைச் சிறந்த அடியவராக ஆக்கினால் உன் குறைவு அற்றுப் போகும்'' என்று கூற, நானும் இப்படி வந்தேன்'') என்று தான் அங்கு வந்தவாற்றை அந்த மருத்துவனுக்குச் சொன்னாள். அவனும் குழந்தை இல்லாதவன் ஆகையால் மிகவும் மகிழ்ந்து ''நீ நம்முடைய ஊருக்கு வா'' என்று அழைத்துக் கொண்டுபோய், தன்னுடைய மனைவியிடம் அப் பெண் வந்த வரத்தைச் சொல்லி, அவளை வளர்க்கும்படி சொன்னான். அவளும் குழந்தை இல்லாதவளாகையால் மிகவும் மகிழ்ச்சியுடன் அவளை ஏற்றுக் கொண்டாள்.*

*குமுத மலரைக் கொய்து கொண்டு நின்றபடியால் இவளுக்குக் 'குமுதவல்லி' என்று பெயரிட்டு அவர்கள் இருவரும் தங்கள் மகளாக வளர்த்துக் கொண்டு வந்தார்கள். சிலர் பரகாலரிடம் சென்று குமுதவல்லியினுடைய அழகை மிகவும் புகழ்ந்து கூற, அவரும் அதனைக் கேட்டு நின்றவா நில்லா நெஞ்சினை உடையவராய், திருநாங்கூரில் மருத்துவனுடைய இல்லத்திற்குச் சென்று அவனுன் உரையாடிக் கொண்டிருந்தபோது குமுதவல்லியைக் கண்டு ஆச்சர்யப்பட்டு மருத்துவனிடம் ''தேவமாதைப் போன்ற அழகுடைய இப்பெண்ணானவள் உமக்கு எப்படிக் கிடைத்தாள்?'' என்று கேட்க, அவனும் பெண் கிடைத்தவாற்றைக் கூறினான். ''இப்பெண்ணால் குழந்தையில்லாத துன்பம் எனக்குத் தீர்ந்தது. குலம் கோத்திரம் அறியாத இப்பெண் திருமணம் செய்ய வேண்டிய வயதை அடைந்துவிட்டாள். இவளை யாருக்கு மணம் செய்விப்பது என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறேன்'' என்றான். பராகாலல் ''இப்பெண்ணை எனக்கு மனைவியாகக் கொடும்'' என்று கூறி ஆடை ஆபரணங்களை மிகுதியாகக் கொடுத்து மிகவும் வேண்டிக் கேட்க, அந்த தம்பதிகளும் அப்பெண்ணை இவருக்குக் கொடுக்க முடிவு செய்தார்கள். அப்போது குமுதவல்லி ''தாப: புண்ட்ர: ததா நாம மந்த்ரோ யாகஶ்ச பஞ்சம:'' (நெருப்பிலிட்ட சங்கசக்ர முத்ரைகளைத் தோள்களில் பொறிப்பது, திருமண்காப்பு இடுவது, மந்திரோபதேசம், திருவாராதனம்) என்று சொல்லப்பட்ட பஞ்சஸம்ஸ்காரம் (ஐஞ்சடங்குகள்) பெற்றருக்குத் தவிர மற்றொருவருக்கு மனைவியாக வாழ்க்கைப் படமாட்டேன்'' என்று தன் நெஞ்சில் இருந்த உறுதியைச் சொன்னாள். பரகாலரும் அதனைக் கேட்டு ''ஶுபஸ்ய ஶீக்ரம்'' (மங்களகாரியங்களை விரைவில் செய்ய வேண்டும்) என்று கூறியுள்ளபடி மிகவும் விரைவாகத் திருநறையூருக்குச் சென்று பொன்னியலும் மாடக் கவாடம் கடந்து புக்கு திருநறையூர் நம்பி திருவடிகளில் தண்டன் ஸமர்ப்பித்து ''தேவரீர் அடியேனுக்கு இரங்கி க்ருபை பண்ண வேணும் என்று ஒரு காரணத்தினால் தேவரீர் திருவடிகளைப் பற்ற வந்தேன் என்று கூற, நம்பியும் ''அக்நி தப்தேந சக்ரேண பாஹுமூலே லாஞ்சித:'' (நெருப்பினால் காய்ச்சப்பட்ட சக்கரத்தினால் தோளில் அடையாளம் செய்யப்பட்டு) என்றும் ''தீயில் பொலிகின்ற செஞ்சுடராழி திகழ் திருச்சக்கரத்தின் கோயில் பொறியாலே ஒற்றுண்டு'' என்று கூறப்பட்டபடி திருவிலச்சினையையும் பன்னிரு திருமண்காப்புகளையும் அருளி திருமங்கையாழ்வார் என்ற திருநாமமும் கொடுத்து விடைகொடுத்தருளினார். ''ஸர்வைஶ் ஶ்வேதம்ருதா தார்யம் ஊர்த்வபுண்ட்ரம் யதா விதி, ருஜூநி ஸாந்தராளாநி ஹ்யங்கேஷு த்வாதஶஸ்வபி'' (வெள்ளை மண்ணால் நேரானதாகவும் இடைவெளி உள்ளதாகவும் பன்னிரண்டு அவயவங்களிலும் அனைவராலும் ஊர்த்வபுண்ட்ரமானது அழகாக அணியப்படவேண்டும்) என்று கூறியுள்ளபடி கேசவன் முதலான பன்னிரண்டு திருமண்காப்புகளை அணிந்தவராய் வந்த ஆழ்வாரைப் பார்த்து குமுதவல்லி ''மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்; ஆனால் இன்னமும் ஒரு விரதம் எனக்கு உண்டு. தினந்தோறும் ஆயிரத்தெட்டு ஸ்ரீவைஷ்ணவர்களை அமுது செய்வித்து அவர்களுடைய ஸ்ரீபாததீர்த்தமும் தளிகைப்ரஸாதமும் ஏற்றுக்கொண்டு நிறைவேற்றினாலொழி உம்மை நான் கணவராக ஏற்றுக் கொள்ள மாட்டேன்'' என்று கூறினாள். ஆழ்வாரும் அதற்கு இசைந்து அவளிடம் இருந்தா அன்பால் அப்படியே செய்வதாக உறுதி அளிக்க, அதற்குப் பிறகு நாடும் ஊரும் அறிய இவர்களுக்குத் திருமணம் நடந்தேறியது.*

*பிறகு ஆழ்வாரும் ''ஆராதநாநாம் ஸர்வேஷாம் விஷ்ணோராராதநம் பரம், தஸ்மாத் பரதரம் ப்ரோக்தம் ததீயாராதநம் ந்ருப'' (பாத்மோத்தரம் 29.81) (அரசனே! எல்லா*

ஆராதனங்களையும் காட்டிலும் விஷ்ணுவின் ஆராதநம் சிறந்தது; அவனடியார்களை ஆராதிப்பது அதைவிடச் சிறந்தது) என்று கூறியுள்ளபடி மிகவும் அன்புடன் திருமால் அடியார்களைப் பூசிப்பதற்காகத் தம்முடைய செல்வமனைத்தையும் செலவழித்துத் ததீயாராதனம் செய்து வந்தார். ''பரகாலர் கப்பம் கட்ட வேண்டிய செல்வத்தையெல்லாம் ததீயாராதனம் செய்வதற்கே செலவழிக்கின்றார்'' என்று சிலர் சோழ அரசனிடம் கூறினர். அவன் இதுகேட்டுக் கோபமடைந்து கப்பம் கட்ட வேண்டும் என்று இவருக்கு செய்தி அனுப்பினான். செய்தியைக் கொண்டுவந்த ராஜ சேவகர்களிடம் ''தத்யாமேவ நிஶாமுகேதி நமுகே மத்யாஹ்நஸாயாஹ்நயோ: பஶ்சாதாவ்ரகம் யதாமவஸரோ நைவாஸ்தி'' (காலையில் கொடுப்பேன், மாலையில் கொடுப்பேன், நண்பகலில் கொடுப்பேன், மாலையில் கொடுப்பேன், பிறகு கொடுப்பேன், எனக்குப் பேச அவகாசமில்லை போ) என்று பலவிதமாகச் சொன்னார். அதனைக் கேட்டு சலித்துப் போன அவர்கள் ''கப்பம் உடனே தரவேண்டும்'' என்று நிர்ப்பந்தித்துக் கேட்க பரகாலர் கோபம் கொண்டு அவர்களைத் தள்ளிவிட்டார். அவர்கள் போய் சோழ அரசனிடம் நடந்தவைகளை அறிவிக்க, அவன் கோபம் கொண்டு, இவர் தன்னுடைய கட்டளையை மீறியதற்கு மிகவும் கோபம் கொண்டு தன்னுடைய சேனைத்தலைவனை அழைத்து ''பரகாலனை பிடித்துக் கொண்டு இங்கே வரவேண்டும்'' என்று கட்டளையிட்டான். அவனும் யானை குதிரைப் படைகளுடன் சென்று இவரை வளைத்துப் பிடிக்க முயல, பரகாலர் குதிரைமீது ஏறிக் கொண்டு தம்முடைய படைகளுன் ஆரவாரித்துக் கொண்டு வந்து அவனுடைய படைகள் மேலே விழுந்து துரத்தி தோல்வியடையச் செய்து ஓட்டி விட்டார். சேனைத் தலைவனும் ஓடிவந்து தோல்வியை சோழ அரசனுக்கு அறிவிக்க, சோழவரசன் கோபத்தினால் சிவந்த கண்களை உடையவனாய், தன்னுடைய நால்வகைச் சேனைகளுடன் புறப்பட்டான். அவனுடைய சேனைக் கடல் பரகாலரை வளைக்க பரகாலரும் முன்போல உறுதியாகப் பற்றிய ஆயுதத்துடன் ஆரவாரித்துக் கொண்டு வந்து சோழ அரசனுடைய சேனைக் கடலைத் துரத்த, அனைவரும் தோல்வியடைந்து வந்து அரசனிடம் வந்து விழ, சோழவரசனும் மிகவும் கோபத்துடன் ஓடுகின்ற பலத்தை நிறுத்தி உலகத்தில் சிறந்த ஒரே வில்லாளி என்ற பெருமையுடன் பரகாலரை சேனைகளின் நடுவே வளைத்துக் கொண்டான். பரகாலர் மிகச் சிறந்த வீரராக, தம் கையில் ஏந்தியுள்ள ஆயுதங்களின் பலத்தால் சோழனுடைய சேனையை ஒரு பொருட்டாக மதிக்காமல் அனைவரையும் கொன்று குவித்தார். அவருடைய வீரத்தைக் கண்டு மகிழ்ந்த சோழவரசன் பரகாலரை நோக்கி ''நீர் ஒன்றுக்கும் பயப்படவேண்டா. உம்முடைய வீரத்தைக் கண்டு நான் மிகவும் மகிழ்ந்தேன். நீர் செய்த குற்றங்களையெல்லாம் மறந்து விட்டேன். பயப்படாமல் என்னை நம்பி என்னிடம் வாரும்'' என்று தன்னுடைய குரு, தெய்வங்கள் மேல் ஆணையிட்டுக் கூறினான். இவரும் அதனை நம்பி அவனிடம் சென்றவளவில், சோழ அரசன் இவருடைய பராக்கிரமத்தை மிகவும் கொண்டாடி, ''நீர் செய்த துரோகத்தையெல்லாம் மன்னித்துவிட்டேன். எனக்குக் கொடுக்கவேண்டிய கப்பத்தை மட்டும் கொடுத்துவிடும்'' என்று கூறி, இவரைத் தன் அமைச்சனிடம் ஒப்படைத்து ஊருக்குத் திரும்பிவிட்டான். அந்த அமைச்சனும் இவரை ஒரு (திருநறையூர்) கோயிலில் சிறை வைத்தான். பரகாலர் அந்தக் கோயிலில் மூன்று நாள்கள் உணவு உண்ணாமல் பட்டினி இருந்தார். (திருநறையூர் நாச்சியார், நம்பியிடம் ''நம்முடைய பிள்ளை இப்படிப் பட்டினி இருக்கலாமோ?'' என்று கேட்க, பெருமாளும் நாச்சியார் வார்த்தைக்கு இசைய, நாச்சியார் ப்ரஸாதமும் குழம்புப் பாலும் கொண்டுபோய் கொடுத்தாள். இப்படியே பல நாள்கள் சென்றன.

**सतु गत्वाऽऽश्रमं तूर्णं सुमतेस्तु महात्मनः। तत्रत्वालोकयामास तमेव मुनिसत्तमम्॥39॥**

*அந்த ஆத்ரேயரானவர் ஸுமதி மஹர்ஷியினுடைய ஆச்ரமத்தை சீக்ரமாக அடைந்து அவ்விடத்தில் முநிச்ரேஷ்ட்டரான ஸுமதியைப் பார்த்தார்.*

**तेन दृष्टस्सुमतिना यथावत्पूजितस्तदा। सर्वमेतद्यथातत्त्वं कथयामास तत्त्वत:॥40॥**

*ஆத்ரேயரானவர் ஸுமதியினால் பார்க்கப்பட்டு சாஸ்த்ரோக்தமாக பூஜிக்கப் பட்டவராய் ஸகலமான இந்த வ்ருத்தாந்தத்தை யதார்த்தமாகச் சொன்னார்.*

**श्रुत्वा तद्वचनं तस्य सुमतिर्हृष्टमानसः। यथावत्पूजयाञ्चकरे तमृषिं पावकप्रभम्॥41॥**

*இப்படி ஸுமதியானவர் ஆத்ரேயருடைய வார்த்தையைக் கேட்டு ஸந்துஷ்ட சித்தராய் அக்நிபோல சுத்தமான அந்த ஆத்ரேயரை யதாசாஸ்த்ரமாக பூஜித்தார்.*

**सोऽपि तत्र प्रतिष्ठाप्य प्रतिमां तां मुरद्विषः। वेखानसेन विधिना चिरकालमपूजयत्॥42॥**

*அந்த ஆத்ரேயரும் அவ்விடத்தில் பார்த்தஸாரதி விக்ரஹத்தை ப்ரதிஷ்டை செய்து வைகாநஸவிதியினால் வெகுகாலமாராதித்தார்.*

**स समाराध्य सुचिरं वासुदेवं जगद्गुरुम्। आत्रेयः परमं धाम जगाम मधुविद्विषः॥43॥**

*ஆத்ரேயரானவர் இப்படி பார்த்தஸாரதியை வெகுகாலம் ஆராதித்து பரமபதத்தை அடைந்தார்.*

**स इदानीमपि मुने दृश्यते तत्र मानवैः। रुक्मिण्या चानिरुद्धेन प्रद्युम्नेन च सेवितः॥44॥**

**हलायुधेन सहितस्तथा सात्यकिना सह। पार्थसारथिरित्येव विश्रुतो जगतीपतिः॥45॥**

*ஆத்ரேயமஹாமுனிவரால் ப்ரதிஷ்டை பண்ணப்பட்டவராயும் ருக்மிணி அநிருத்தர் ப்ரத்யும்நர் இவர்களால் ஸேவிக்கப்பட்டவராயும் பலராம ஸாத்யகிகளோடு கூடினவராயுமிருக்கிற ஸ்வாமியானவர் ஸேவிக்கப் படாநிற்கிறார்.*

**इदं चैव पुरावृत्तं श्रोतुमर्हसि नारद। यन्मया कथ्यते तस्य वासुदेवस्य शार्ङ्गिणः॥46॥**

*வாரீர் நாரதரே! என்னால் சொல்லப்படுகிற பார்த்தஸாரதியினுடைய பூர்வ வ்ருத்தாந்தத்தைக் கேட்கக் கடவீர்.*

**पूर्वमासीन्महाप्राज्ञो राजा तुण्डीरमण्डले। सुमतिर्नाम नाम्ना तु सर्वलक्षणसंयुतः॥47॥**

**सर्वशास्त्रार्थतत्त्वज्ञः प्रजापालनतत्परः। कल्याणवचनो धीरः कन्दर्प इव मूर्तिमान्॥**

**स ररक्ष क्षितिं राजा युक्तदण्डो यथाविधि॥48॥**

*பூர்வகாலத்தில் துண்டீரமண்டபத்தில் மிகவும் ஜ்ஞாநியாயும் ஸகல லக்ஷணங்களோடு கூடினவனாயும் ஸகல சாஸ்த்ரார்த்தத்தையும் அறிந்தவனாயும் ப்ரஜாபரிபாலநத்தில் ஆஸக்தனாயும் மங்களமான வார்த்தையை யுடையவனாயும் தைர்யசாலியாயும் மன்மதனைப்போலொத்த ரூபத்தை உடையவனாயும் இருந்த ஸுமதி என்ற பெயருடைய ராஜாவானவன் சாஸ்த்ரோக்த தண்டனைபண்ணிக் கொண்டு தர்ம சாஸ்த்ராநுஸாரமாக பூமியைப் பரிபாலித்தான்.*

**समुवाह दृढां भक्तिं हरौ मुरविमर्दने। स समाराधयद्विष्णुं सुमतिर्नृपसत्तमः॥49॥**

*அந்த ஸுமதியானவன் முரனென்னும் அஸுரனை ஸம்ஹரித்த ச்ரிய:பதியினிடத்தில் நிச்சலமான பக்தியை வஹித்தான். அந்த ராஜச்ரேஷ்டனான ஸுமதியானவன் விஷ்ணுவை ஆராதித்தான்.*

**स सम्प्राप्य महीपालो वेङ्कटाचलमव्ययम्। अनेकतरुसम्बाधं नानापक्षिसमन्वितम्॥50॥**

**बहुकन्दरसंकीर्णं नैकनिर्झरशोभितम्। विचित्रैर्धातुभिर्युक्तं शिखरैरुन्नतैरपि॥51॥**

**सेवितं मुनिवर्यैश्च भगवद्भक्तिकोविदैः। अवगाह्यामले राजा स्वामिपुष्करिणीजले॥**

**सुरासुरगुरुं देवं ववन्दे हृष्टमानसः॥52॥**

*அந்த ஸுமதி மஹாராஜாவானவன் அனேகங்களான வ்ருக்ஷங்களாலே நெருக்கமாயும், அநேகபக்ஷிகளோடுகூடியும், பஹுகுஹைகளால் ஸமேதமாயும், அநேக மலையருவிகளால் ப்ரகாஶமாநமாயும், நாநா வர்ணங்களான கைரிக தாதுக்களோடே கூடியும், உந்நதங்களான சிகரங்களோடு கூடிக்கொண்டும், பகவத்பக்திஶீலர்களான அநேக ருஷிகளாலே ஸேவிக்கப் பட்டுமுள்ள அழிவற்ற வேங்கடமலையையடைந்து நிர்மலமான ஸ்வாமி புஷ்கரிணீதீர்த்தத்திலே ஸ்நாநம்பண்ணி ஸந்துஷ்டமான மனஸ்ஸையுடையவனாய் தேவாஸுர பூஜ்யனான திருவேங்கடமுடையானை ஸேவித்தான்.*

**कालाम्बुदमिवाकाशे प्रावृट्काले समुच्छ्रितम्। स्फुरद्रत्नविचित्रेण किरीटेन विराजितम् ॥53॥**
**कुण्डलाभ्यां मनोज्ञाभ्यां शोभितं कर्णयोर्द्वयोः। ग्रैवेयहारकेयूरकर्णिकासमलंकृतम् ॥54॥**
**महद्भ्यां शङ्खचक्राभ्यां शोभिते पार्श्वयोर्द्वयोः। सेवितं चन्द्रसूर्याभ्यामिव कालवलाहकम् ॥55॥**
**पश्यमानश्चिरं देवं सुमतिर्हृष्टमासनः। सानन्दबाष्पनयनो मनसैवमचिन्तयत् ॥56॥**

*பின்னையும் அந்த ஸுமதியானவன் வர்ஷாகாலத்தில் ஆகாஶத்திலிருக்கும் உந்நதமான கறுத்தமேகம் போன்றவராயும், ப்ரகாஶியாநிற்கிற ரத்நங்களால் நாநாவர்ணமான கிரீடத்தினால் விளங்காநிற்பவராயும், மநோஹரங்களான இரண்டு கர்ணகுண்டலங்களாலே சோபிதராயும், கண்டபூஷண முக்தாஹாரங்களென்ன தோள்வளைகளென்ன கர்ணபத்ரங்களென்ன இதுகளால் அலங்கரிக்கப்பட்டவராயும், இரண்டு பார்ஸ்வங்களிலேயும் ஶ்ரேஷ்ட்டங்களான ஶங்கசக்ரங்களால் ப்ரகாசிக்கிறபடியால் ஸுர்யசந்திரர்களால் இரண்டு பக்கங்களிலும் சூழப்பட்ட கறுத்தமேகம் போன்றுள்ளவராயுமுள்ள திருவேங்கடமுடையானை வெகுகாலம் ஸேவியா நின்று கொண்டு ஸந்துஷ்டசித்தனாய் ஆநந்தபாஷ்பயுக்தங்களான கண்களை உடையனவனாய் மநஸ்ஸினால் இப்படி சிந்தித்தான்.*

**अयं स विष्णुर्भगवांस्त्रिधामा शङ्चक्रभृत्। संसाराम्बुधिमग्नानां हितार्थं देहिनां स्वयम् ॥**
**आस्ते सदाऽत्र भगवान् योगिनामपि दूरगः ॥57॥**

*பகவானாயும் ஶங்கசக்ரதரராயும் த்ரிதாமாவாயுமிருக்கிற இந்த விஷ்ணுவானவர் ஸம்ஸாரமாகிற ஸமுத்ரத்தில் மூழ்கியிருக்கிற ப்ராணிகளுடைய க்ஷேமத்தின் பொருட்டு யோகிகளுக்கும் அடையக்கூடாமலிருக்கும் ஸ்வாமியிருந்தும் தயையினால் ஶேஷாசலத்தில் வஸிக்கிறார்.*

**अयं हि तस्मिन् संग्रामे सारथ्यं तु किरीटिनः। चक्रे दयापरवशः साक्षाच्चक्रधरो हरिः ॥58॥**
**अपि तेनैव रूपेण स्फुरत्सारथ्यलक्ष्मणा। ममाद्य दयया देवः स्वयमाविर्भविष्यति ॥59॥**

*சக்ரதரரான இந்த ஸ்வாமியானவர் தயாபரவஶராய் பாரதயுத்தத்தில் அர்ஜுநனுக்கு ஸாரத்யத்தைப் பண்ணினார். ப்ரகாஶமான ஸாரத்ய சிஹ்நத்தை யுடைத்தான ஸ்வரூபத்தோடு கூடினவராய் அடியேனுக்கு ஸேவை ஸாதிக்கப்போகிறாரா.*

**एवं चिन्तयमाने तु सुमतौ धर्मवत्सले। आबभाषे महातेजाः स हि वेङ्कटनायकः ॥60॥**

*தர்மவத்ஸலனான ஸுமதி மஹாராஜன் இப்படி சிந்தியாநின்றுள்ளவளவிலே மஹத்தான காந்தியை உடைய அந்த திருவேங்கடமுடையான் ஒரு வார்த்தை சொன்னார்.*

**यत्तेऽभिलषितं राजन् तत्तथैव भविष्यति। यत्तु बृन्दावनं नाम विपिनं मुनिसेवितम् ॥**
**तत्र ते दर्शयेऽहं वै यद्रूपं तु तवेप्सितम् ॥61॥**

*வாராய் ஸுமதி மஹாராஜாவே! எந்தக் கார்யம் உன்னால் இச்சிக்கப்பட்டதோ, அது அப்படியே ஆகப்போகிறது. ப்ருந்தாவனமென்று ப்ரஸித்தமான எந்த க்ஷேத்ரமுண்டோ அதைக்குறித்துப்போ. அவ்விடத்தில் உன்னால் சிந்திக்கப் பட்ட ஸ்வரூபத்தைக் காண்பிக்கப் போகிறேன்.*

**इत्येवमुक्तः सुमतिः तस्माद्बृन्दावनं ययौ। तत्र प्रकाशमानं तं तमालाख्यमिव द्रुमम् ॥62॥**

**वहन्तं शङ्कराजानं दक्षिणे करपल्लवे। दानमुद्रां च सव्ये तु सर्वाभरणमूषितम्॥63॥**
**स प्रणम्य मुनिश्रेष्ठः सुमतिर्हृष्टमानसः। वासुदेवं जगन्नाथमतिमात्रं मुदं ययौ॥64॥**

*திருவேங்கடமுடையானால் இப்படிச் சொல்லப்பட்ட அந்த ராஜாவானவன் திருமலையினின்றும் ப்ருந்தாவனத்தை அடைந்தான். அங்கு அந்த அரண்யத்தில் ப்ரகாஶியா நிற்பவரும், தமாலவ்ருக்ஷம் போல் கறுத்த திருமேனியை உடையவரும், வலத்திருக்கையில் பாஞ்சஜந்யத்தை வஹியாநிற்பவரும், இடத்திருக்கையில் தாநமுத்ரையுடையவரும், ஸகலாபரணங்களால் அலங்க்ருதருமான பார்த்தஸாரதியை அந்த ஸுமதியென்கிற ராஜர்ஷியானவன் ஸந்துஷ்டசித்தனாய் தண்டம் ஸமர்பித்து மிகவும் ஸந்தோஷத்தை அடைந்தான்.*

**स तस्य विधिवद्राजा देवदेवस्य शार्ङ्गिणः। उत्सवं कारयामास चैत्रे मासि शुभोदये॥65॥**

*அந்த ஸுமதிமஹாராஜாவானவன் தேவதேவனான அந்த ஸ்வாமிக்கு ஶுபமான ஆவிர்ப்பாவத்தை உடைய சித்திரைமாஸத்திலே உத்ஸவத்தை யதாஶாஸ்த்ரமாகப் பண்ணிவைத்தான்.*

**इदं मया यदाख्यातं पुरावृत्तं महामुने। संक्षेपेण यथावृत्तं को वक्तुं शक्नुयान्नरः॥66॥**

*வாரீர் நாரதரே! இந்த பூர்வகால வ்ருத்தாந்தமானது ஸம்க்ஷேபமாக என்னால் சொல்லப்பட்டது. இதை நன்றாகச்சொல்ல ஸமர்த்தன் யார்?*

**य इदं श्रणुयाद्विप्र भक्त्या पापप्रणाशनम्। आख्यानं स हरेर्धाम याति पापयुतोऽपि वा॥67॥**

*எந்த புருஷனானவன் பக்தியினாலே இந்த வ்ருத்தாந்தத்தைக் கேட்கிறானோ அந்த புருஷன் பாபஸஹிதனானாலும் பரமபதத்தை அடைவன்.*

**अथान्यस्तत्र योऽप्यस्ति सप्तरोमेति विश्रुतः। मुनिः परमभूयिष्ठः सर्वभूतहिते रतः॥68॥**
**वैनतेयाधिरूढं तु स कृत्वा विष्णुमव्ययम्। शङ्खचक्रधरं देवं वहन्तमभयं मुने॥69॥**
**वैखानसेन विधिना संस्थाप्य पुरुषोत्तमम्। चिरमाराध्य विधिवत् वरदं प्रणमन्नृणाम्॥**
**देहावसाने तद्दिव्यं पदं प्राप मुरद्विषः॥70॥**

*பின்னையும் அவ்விடத்தில் ஸப்தரோமா என்று ப்ரஸித்தரான ஒரு மஹர்ஷியானவர் இருந்தார். அந்த ருஷி, கருடாரூடராயிருக்கும் வரதனையேறி யருளப்பண்ணி வைகாநஸ விதியினாலே ஸ்தாபித்து வெகுகாலம் ஶாஸ்த்ரோக்தமாக ஆராதித்து தேஹாவஸாந காலத்திலே முரத்விட்டாயிருக்கிற ஸ்வாமியினுடைய திவ்யமான ஸ்த்தானத்தை அடைந்தார்.*

**सोऽपि संप्रति सर्वेषां प्राणिनां गोचरीभवन्। वरदो नाम देवेशो दृश्यते तत्र वै हरिः॥71॥**

*இப்போதும் வரதனென்று ப்ரஸித்தரான ஸ்வாமியானவர் மனுஷ்யர்களுடைய கண்களுக்கு விஷயராய்க்கொண்டு அங்கு எழுந்தருளியிருக்கிறார்.*

**एवं पञ्च समाख्याता मूर्तयो मुनिसत्तम। याः पृष्टवानसि पुरा विष्णोस्तु दनुजद्विषः॥72॥**

*வாரீர் நாரதரே! அஸுராந்தகரான விஷ்ணுவினுடைய எந்தெந்த மூர்த்திகளைக் கேட்டீரோ அந்தந்த மூர்த்திகள் இப்படி ஐந்து ப்ரகாரங்களாகச் சொல்லப்பட்டன.*

**इति श्रीब्रह्माण्डपुराणे महेश्वरनारदसंवादे बृन्दारण्यक्षेत्रमाहात्म्ये अष्टमोऽध्यायः॥ श्रीमद्वरवरमुनये नमः॥**

## श्रीबृन्दारण्यक्षेत्रमाहात्म्ये नवमोऽध्यायः॥

**नारदः - विज्ञाता मूर्तयः पञ्च विष्णोरत्र महात्मनः। तीर्थस्य वैभवं चापि वक्तुमर्हसि शङ्कर॥1॥**

*நாரதர் சொன்னார்: வாரீர் ஶங்கரனே! இந்த ப்ருந்தாவனத்திலே எம்பெருமானுடைய மந்நாதாதிகளான ஐந்து திருக்கோலங்கள் உம்மிடத்தினின்றும் என்னாலே நன்றாக அறியப்பட்டன. இந்த கைரவிணீ தீர்த்தத்தினுடைய வைபவத்தையும் சொல்லும்பொருட்டு ஸமர்த்தராக இருக்கிறீர்.*

**रुद्रः- को नाम मुनिशार्दूल शक्तो वक्तुं हि वैभवम्। तस्य तीर्थस्य महतो मनुष्यो देव एव वा ॥2॥**

*ருத்ரன் சொன்னார்: வாரீர் முநிஸ்ரேஷ்ட்டரான நாரதரே! இந்த லோகத்திலே மநுஷ்யனாவது தேவனாவது எவன்தான் மஹத்தரமான அந்த தீர்த்தத்தினுடைய வைபவத்தைச் சொல்லுதலின் பொருட்டு ஸமர்த்தனாவன்?*

**इदं गुह्यतमं लोके तस्य तीर्थस्य वैभवम्। यत्पृष्टवानसि मुने त्वं मामद्य महाव्रत ॥3॥**

*வாரீர் மிகுந்த வ்ரதத்தை உடைய நாரதரே! இப்போது என்னை நீர் எத்தை ப்ரஶ்நம் பண்ணினீரோ, அந்த தீர்த்தத்தினுடைய வைபவமானது இந்த லோகத்திலே மிகவும் குஹ்யதமமாயிரா நிற்கிறது.*

**सा हि कैरविणी नाम कैरवोत्पलशोभिता। संफुल्लपद्मसञ्छन्ना सरसी विमलोदका ॥4॥**

**हंसैश्च मानसावासैः सर्वदा सङ्घशो युता। कारण्डवैस्सारसैश्च नित्यमत्तैः सदावृता ॥5॥**

**मिथुनैश्चक्रवाकानां मधुरारवसंयुतैः। सेविता विहगैरन्यैः अतिहृद्यविराविभिः॥**

**षट्पदारवसञ्छन्ना सङ्कीर्णा तीरजैर्द्रुमैः ॥6॥**

*ஆம்பல்களென்ன செங்கழுநீர் புஷ்பங்களென்ன இதுகளாலே சோபிதையாயும், விகஸிதங்களான பத்மங்களினாலே மறைக்கப்பட்டதாயும், நிர்மலமான தீர்த்தத்தை யுடைத்தாயுமிருக்கிற அந்த ஸரஸ்ஸானது கைரவிணீ என்று ப்ரஸித்தையாயிருக்கிறது. இன்னும் எப்படியிருக்கிறதென்றால், மாநஸ ஸரஸ்ஸிலே வாஸம் பண்ணாநிற்கிற ஹம்ஸங்களினாலே எப்போதும் கூடிக் கொண்டும், எப்போதும் மதித்திருக்கிற காரண்டவ ஸாரஸ பக்ஷிகளாலே சூழப்பட்டும், மதுரமாக ஶப்தித்துக்கொண்டிருக்கும் சக்ரவாக மிதுநங்களோடு கூடிக் கொண்டும், மனோஹரமாக ஶப்தியா நின்றுள்ள அநேக பக்ஷிவிஶேஷங்களாலே ஸேவிதையாயும் வண்டுகளுடைய ஐங்காரங்களாலே வ்யாப்தையாயும் கரையிலே உண்டான ஸகல வ்ருக்ஷ விஶேஷங்களோடே கூடிக்கொண்டும் எந்த ஸரஸ்ஸானது ப்ரகாசியா நிற்கிறதோ!*

**तस्याः पञ्च प्रशस्तानि तीर्थानि परितो मुने। तेषां मध्ये कैरविणी स्थिता सा सरसी शुभा ॥7॥**

*வாரீர் நாரதரே! அந்த கைரவிணியினுடைய நாலுபக்கங்களிலும் ப்ரஶஸ்தங்களான ஐந்து தீர்த்தங்கள் இருக்கின்றன. அந்த தீர்த்தங்களின் மத்தியில் பாவனையான அந்த கைரவிணி யிருக்கிறது.*

**या दृष्टाऽपि नृणां पापं नाशयत्यमलोदका। किं पुनः स्पर्शनस्नानैः दुलर्भं भुवि मानवैः ॥8॥**

*அந்த கைரவிணியானது த்ருஷ்டமாத்ரையாயிருந்து கொண்டு மநுஷ்யர்களுடைய பாபத்தை நஶிப்பியா நிற்கிறது. அந்த கைரவிணீ ஸ்பர்ஶந ஸ்நாநங்களாலே பூமியில் அடையக் கூடாத புருஷார்த்தம் என்ன இருக்கும்?*

**श्रियमायुर्यशः कान्तिं आरोग्यं पशुपुत्रकान्। प्राप्नोति दुर्लभं चापि पदं स्नातस्ततो नरः ॥9॥**

*அந்த கைரவிணியில் யாவனொரு புருஷன் ஸ்நாநம் பண்ணுகிறானோ, அவன் ஆயுராரோக்ய யஶ:காந்திபஶுபுத்ரர்களையும் மற்றும் துர்லபமான புருஷார்த்தத்தையும் அடைகிறான்.*

**न जन्म पुनरायाति तस्यां स्नातो नरः क्वचित्। नायशो नैव नरकं न चाभक्तिं जनार्दने ॥10॥**

*மநுஷ்யனாவன் ஒரு கால் ஸரஸ்ஸிலே ஸ்நாநம் பண்ணினவனாய்கொண்டு மறுபடியும் ஜந்மத்தை அடையான். அபயஶஸ்ஸையும் நரகத்தையும் பகவத் பக்தியில்லாமையையும் அடையமாட்டான்.*

**तस्यां स्नातः सकृन्मर्त्यः मुच्यते सर्वकिल्बिषैः। पदं तदपि चाप्नोति यदनन्तमनादि च ॥11॥**

*அந்த ஸரஸ்ஸிலே ஸ்நாதன நரனாவன் ஸமஸ்தபாபங்களின்றும் விடுபடுகிறான். எந்த ஸ்தாநமானது அநந்தமாயும் அநாதியாயுமிருக்கிறதோ, அந்த ப்ராப்யமான பரமபதத்தையும் அந்தத்திலே அடையாநிற்கிறான்.*

ஏகாகீ - (ஸம்), அஸஹாயன்
ஏகாக்ர: - (ஸம்), ஒரே சிந்தையையுடையவன்
ஏகாங்கி - (தே), 1. தனிமையாயிருக்குமவன் 2. ஸந்யாஸி
ஏகாதபத்ரமாக - (தே), ஈரரசிந்திக்கே
ஏகாத்மா - (ஸம்), (சிதசித்துக்களுக்கு),, சேஷியாயும் போக்தாவாயும் அபிமானியுமாகிற ஒராத்மாவான ஸர்வேச்வரன் (தத்வ விதேகாத்மா-ஸஹஸ்ரநாம்நி),
ஏகாதசருத்ரர்கள் - (தே), பதினோரு ருத்ரர்கள். (அவர்களாகிறார், அஜைக பாதஹிர்புத்ந்ய விருபாஷ்ரோஏஏதரைவத:? ஹரச்ச பஹுரூபச்ச த்ர்யம்பதச்ச ஸுரேச்வர: ஸாவித்ரச்ச ஜயந்தச்ச பிநாகீ சாபராஜித: ஏதே ருத்ராஸ் ஸமாக்யாதா ஏகாதசகணேச்வரா: (மாத்ஸ்யபுராணம் அத். 5).
ஏகாதசி - (ஸம்), ஹரிதினம் என்னும் திதி விசேஷம். (பக்ஷ த்வயத்திலுமுள்ள இந்த ஏகாதசி திதியில் ஸர்வ வர்ணாச்ரமஸ்தரும் உபவாஸமிருந்து ஸர்வேச்வரனை ஆராதித்து மறுநாள் உதயகாலத்தில் பாரணை செய்தால் பகவதநுக்ரஹ பாத்ரபூதராவர்கள். (சுக்லேவா யதிவா க்ருஷ்ணே விஷ்ணுபூஜந தத்பர: ஏகாதஸ்யாம் ந புஞ்ஜீத (விஷ்ணுரஹஸ்யே.) இதன் விஸ்தரம் பாஞ்சராத்ராதிகளில் காண்க).
ஏகாந்தம் - (தே), 1. முக்யம், 2. ரஹஸ்யம் 3. தனிமை 4. மிகவும் 5. தகுதி.
ஏகாந்தீ - (ஸம்), பகவத் பக்தரான பத்து வித வைஷ்ணவர்களில் ஒருவன். (ஏகாந்தியாகிறான் ஸ்ரீமந்நாராயணனை ஒழிய தேவுமற்றறியாதவனாய், க்ருஷ்ணப்ராப்திக்கு கர்மஞானம் முதலானவற்றோடு தேவதாந்தரங்களோடு வாசியற மற்றெல்லா ஸாதனங்களையும் த்யாஜ்யதயா நிச்சயித்து க்ருஷ்ணைக ஸாதநனாய், பகவதநுபவ அபேக்ஷயா ஐச்வர்ய கைவல்யாதி புருஷார்த்தங்களை சிற்றின்பங்களாக நிச்சயித்து, பகவத் கைங்கர்யரூபமான பரமபுருஷார்த்தத்திலே நிலைநிற்குமவன். இவனுக்கு அநந்ய தைவத்வம் அநந்ய உபாயத்வம், அநந்ய ப்ரயோஜநத்வங்கள் லக்ஷணங்கள். "ஏகாந்திது விநிச்சித்ய தேவதா விஷயாந்தரை: பக்துபாயம் ஸமம் க்ருஷ்ண ப்ராப்தௌ க்ருஷ்ணைக ஸாதந: ஏகாந்தீ வ்யபதேஷ்டவ்ய: - தஸ்ய ஸர்வம் ஸ ஏவ ஹி தேஷமே காந்தி நச்ரேஷ்டாயோசைநாளந்ந்ய தேவதா: இன்னும் மற்றுமுண்டான ப்ரமாணங்கள் பகவத்சாஸ்த்ரத்தில் கண்டு கொள்வது).
ஏகாயந: - (ஸம்), 1. பரப்ரஹ்ம ப்ரதிபாதகமாய் "வேதமேகாயநம் ப்ரஹ்ம" என்று வேதாத்மகமான ஏகாயனசாகாத்யயனம் செய்பவன். (இவன் பரார்த்தமாக பகவதாராதனம் செய்யும் அதிகாரிகளில் ஒருவன்). 2. ஏகாக்ரசித்தன்.
ஏகார்ணவ: - (ஸம்), ப்ரளய காலத்தில் உண்டாகும் பெருநீர்.
ஏகாவளி - (ஸம்), ஒற்றை வடமுள்ள முக்தாஹாரம்
ஏகாஹ: - (ஸம்), ஏகதினம்
ஏ: - (ஸம்), பொய்
ஏகீபவித்து - (தே), ஒன்றாய்
ஏகீய: - (ஸம்), ஒரு பக்ஷத்திலிருக்குமவன்
ஏகைகம் - (ஸம்), ஒவ்வொன்று (ஏகைகபல லாபாய)

ஏகோதிஷ்டம் - (ஸம்), ம்ருத தினத்தின் பதினோறாநாள் ப்ரேதம். ஒன்றையே உத்தேசித்துச்செய்யும் ச்ரார்த்தம்.
ஏகோபித்தல் - (தே), 1. ஒன்றாதல் 2. ஒருமனப்படுதல்
ஏக்கம் - (தே), 1. பயம் 2. விசாரம் 3. பேராசை 4. ஏங்குகை
ஏக்கரவு - (தே), 1. ஏற்றுக்கொள்ளுதல் 2. வணங்கல்
ஏக்கறுதல் - (தே), 1. அவமானித்தல் 2. தாழ்ந்து நிற்றல்
ஏக்கற்றவர் - (தே), பாணத்தை எய்யக்கற்றவர்
ஏங்கி - (தே), துக்கப்பட
ஏங்கல் - (தே), 1. அஞ்சல் 2. பொருதல் அழுதல் 3. இரங்கல் 4. ஒலித்தல் 5. மயில் குரல் 6. விசாரப்படுதல் 7. இசைத்தல்
ஏங்கு - (தே), த்வநி.
ஏச்சு - (தே), 1. பரிஹாசம் 2. வைதல் 3. தோஷம் 4.நிந்தை “பாவிகாள் உங்களுக்கு ஏச்சுகொலோ” நா.தி.12-7.
ஏஜதே - (ஸம்), ப்ரகாஸிக்கிறான் ஏஜ்ரு-தீ பௌ ப்வா கர்த்தரி லட்.
ஏட்டுக்கெழு நாக்கு - (தே), ஓலைமுறி
ஏட்டை - (தே), 1. ஆசை, 2. தளர்வு
ஏத: - (ஸம்), 1. பதிரன் 2. மேஷம்
ஏதகம் - (ஸம்), 1. ஆடை 2. தென்னை மரம் 3. பலகை 4.பனைமரம் 5. பூவிதழ்.
ஏடணை - (தே), ஆதரம்
ஏடல் - (தே), கருத்து
ஏடன் - (தே), 1.செவிடன் 2. தோழன்
ஏடி - (தே), தோழியை முன்னிலையாக ஸம்போதிக்கை.
ஏடு - (தே), 1.பூவிதழ் 2.பனை ஏடு 3.குற்றம் 4.பாலேடு 5. பொல்லாங்கு 6. துக்க ஸூசகம் 7.கண்ணிமை 8.ஸூக்ஷம சரீரம்.
ஏடுநிலம் - (தே), 1. பொல்லாங்கு நிலம் 2. கைவல்யம் 3.ச்மசானம்
ஏடூக: - (ஸம்), காஷ்டாதி கடின த்ரவ்யங்களோடு கூடிய குட்யம்
ஏடேறு பெருஞ்செல்வம்- (தே), ஏடு குற்றமாய், ஏறுகை போகையாய், குற்றமற்ற பெருசெல்வம். 2. புஸ்தகத்தில் எழுதிப்பார்க்கவேண்டும்படியான பெருஞ் செல்வம்.
ஏண: - (ஸம்), க்ருஷ்ண ம்ருகம்
ஏணம் - (தத்ப), 1. மான் 2. மான்தோல் 3. எலும்பு 4.நிலை பெறுதல் 5. வலி
ஏணல் - (தே), வசைவு
ஏணாஜினம் - (ஸம்), க்ருஷ்ணாஜினம்
ஏணாப்பு - (தே), இறுமாப்பு
ஏணி - (தே), 1.ஏறுகைக்கு ஸாதனம் 2. எல்லை 3.நாடு
ஏணிலேன் - (தே), 1. ஸாதனம் அறியமாட்டேன் 2. விரோதி ஸ்வரூபம் அறியமாட்டேன்.
ஏணீ - (ஸம்), மான் பேடு
ஏணை - (தே), 1. ஆடு 2. மஞ்சம்
ஏண் - (தே), 1. உயர்த்தி 2. ஞானம் 3. எண்ணிக்கை 4. மலை, 5. பெருமை 6. வலி 7. வசைவு 8.நிலை உடைமை.
ஏத: - (ஸம்), 1. வந்தான் 2. பல வர்ணமுள்ளது

ஏதடை - (தே), விரோதம்
ஏதத் - (ஸம்), மிகவும் சமீபத்திலுள்ளது.
ஏதம் - (தே), 1. தோஷம் 2. பொல்லாங்கு 3. யுத்தம் 4.வருத்தம் 5. குற்றம் (ஏதமில் ஆயிரம் திருவாய்.1-8-11). 6. உத்தராகம் 7.மான்
ஏதலர் - (தே), சத்ருக்கள்
ஏதர்ஹி - (ஸம்), இந்தக்காலத்தில்
ஏதச: - (ஸம்), ப்ராஹ்மணன்
ஏதாவத் - (ஸம்), இவ்வளவு
ஏதாவது, ஏதானும் - (தே), எதுவாவது
ஏதி - (ஸம்), அடைகிறான். (இண்-கதௌ ஆதா கர்த்தரி லட்). (தே), 1. வாள் 2. எருமை 3. ஆயுதப்பொது
ஏதிலர், ஏதலார் - (தே), 1. சத்ருக்கள், 2. அயலார் 3. தரித்ரன்
ஏதில் - (தே),1. சத்ரு, 2. ஸமானம் 3. அயல்
ஏது - (தே), 1. யாது 2. ஏன், 3. காரணம்
ஏதுகை - (தே), 1. அநுபவிக்கை 2. கிட்டுகை
ஏதும் - (தே), யாதொன்றும்
ஏதேனும் - (தே), ஏதாவது
ஏதை - (தே), வேதை
ஏத்தல் - (தே), ஸ்துதித்தல்
ஏத்தாது - (தே), ஸ்துதியாது
ஏத்தாளிகள் - (தே), ஸ்தோத்ரம் பண்ணுமவர்கள்
ஏத்துகை - (தே), ஸ்துதி செய்கை
ஏத்துவிளி - (தே), அழைக்கை
ஏத: - (ஸம்), 1. விறகு 2. நிறைவு
ஏததே - (ஸம்), வ்ருத்தி அடைகிறான் (ஏத-வ்ருத்தா ப்வாதி கர்த்தரி லட்),
ஏதித: - (ஸம்), வ்ருத்தி அடைந்தவன்
ஏந: - (ஸம்), 1. பாபம் 2. அபராதம் 3. நித்ரை
ஏந்தல் - (தே), 1. அரசன் 2. உயர்ச்சி 3. ஏந்துதல் 4.பெருமை 5. மலை 6. ஸஹித்தல்
ஏந்துகை - (தே), 1. தரிக்கை 2. தாங்கல்
ஏந்தி - (தே), 1. தரித்து, 2. தரித்ரன்
ஏந்திரம் - (தே), அரைக்கைக்கு ஸாதனமான யந்த்ரம்
ஏபாவம் - (தே), என்ன பாபமோ?
ஏமம் - (தே), 1. காவல் 2.ராத்ரி 3. இன்பம் 4.உன்மாதம் 5.களித்தல் 6.கலக்கம் 7.பொன் 8.க்ஷேமம் 9.மயக்கம் 10. கட்டு 11.அழகு 12.வலி.
ஏமருதல் - (தே), 1.கலங்குதல் 2.திகைத்தல் 3.மிக்க களிப்புறல்
ஏமருதோள் - (தே), சத்ருவை அழிக்கவல்ல திருத்தோள்களை உடைய சக்ரவர்த்தி திருமகன் (ஏமருதோளன் புதல்வன் பெருமாள் திரு.9-7).
ஏமருவெஞ்சிலை - (தே), அம்பிலே மீட்கத்தக்க வெவ்விய ஸ்ரீசார்ங்கம் (ஏமருவெஞ்சிலை வலவா பெருமா.திரு 8-4).
ஏமாத்தல் - (தே), 1. களித்தல் 2. மிக்க ஆசைகொள்ளல்
ஏமாந்துகை - (தே), 1. அநவதானமுள்ளவனாயிருக்கை 2.நிர்பரத்வம்

ஏமாப்பு - (தே), 1.கர்வம் 2. மிகக்களிப்பு 3. கருத்து 4.காவல்
ஏமாறு - (தே), 1.துக்கம் 2.மாந்த்யம் 3.கலக்கம் 4.தடுமாறுகை 5. அலமருகை
ஏமாற்றம் - (தே), துக்கம், தெளிவு
ஏமுறல், ஏமுறுதல் - (தே), .இறுமாப்புறல் 2. மயங்குதல்
ஏம்பல், ஏம்புதல் - (தே), அங்கலாய்த்தல்
ஏயான் - (தே), 1. தகாதவன் 2. பொருந்தாதவன்
ஏய் - (தே), 1.ஒப்பு 2. அழகு 3. பொருந்துதல்
ஏய்தல் - (தே), 1. ஒப்பாதல் 2. பொருந்தல் 3. இயைதல்
ஏய்த்தல் - (தே), 1. இசையப்பண்ணுதல் 2. ஸமாநித்தல்
ஏய்ந்த - (தே), மிகுதியான
ஏய்ப்ப - (தே), ஸமானமான
ஏரங்க: - (ஸம்), ஓர் வகை மீன்
ஏரண்ட: - (ஸம்), ஆமணக்கு
ஏரார் - (தே), அழகு மிக்கிருக்கிற
ஏராளம் - (தே), மிகுதி
ஏராளர் - (தே), உழவர்
ஏரி - (தே), 1. தடாகம் 2. ஏரி 3. இமில் 4. புனர்ப்பூசம்
ஏருழவர், ஏருழுனர் - (தே), பயிர் செய்பவர்
ஏர் - (தே), 1. அழகு 2. பயிர் செய்ய கருவி 3.தகுதி 4.உழுமாடு.
ஏர்கொண்ட வீடு - (தே), ஸர்வ விலக்ஷணமான மோக்ஷம்.
ஏர்கொள் - (தே), சுந்தரமான
ஏர்வு - (தே), எழுச்சி
ஏர்ப்பு - (தே), ஈர்ப்பு
ஏல - (தே), 1. முன்னம் 2. இயல 3. தகுதி 4.ஏற்கவே
ஏலக: - (ஸம்), மேஷம்
ஏலக்குழலி - (தே), பரிமளம் நிறைந்த மயிர்முடியை உடையவள் (ஏலக்குழலி இழந்தது சங்கே திருவாய்.6-6-1).
ஏலக்கோலம் - (தே), ஆயத்தம்
ஏலக்கோலி - (தே), முந்துற முயன்று
ஏலபில: - (ஸம்), குபேரன்
ஏலம் - (தே), 1. ஏலக்காயிலுள்ள விரை 2.நறுநாற்றம்
ஏலவாலுகம் - (தே), பரிமள த்ரவ்ய விசேஷம்
ஏலவே - (தே), முன்னமே
ஏலா - (தே), 1.விஸத்ருசமான (ஸம்), 2. ஏலக்கொடி
ஏலாத - (தே), பொருந்தாத
ஏலாதார் - (தே), சத்ருக்கள்
ஏலாப்பு - (தே), துன்பம்
ஏலாமை - (தே), 1.இணங்காமை 2. கூடாமை 3.துன்பம்
ஏலி - (தே), மது
ஏலுகை - (தே), 1. கொள்ளுகை 2.தகுதி
ஏலுதல் - (தே), 1. பொருந்தல் 2. இயலுதல்

ஏலுமறை - (தே), தகுந்த வேதம் (ஏலுமறைப்பொருளே பெரியாழ்.திருமொ.1-6-9).
ஏலும் - (தே), 1. ஆகிலும் 2. தகுந்தது 3. அதிகம்
ஏலோர் - (தே), பாதபூரணம்
ஏல் - (தே), 1. ஒப்பு 2. அவ்யயம்
ஏவ - (ஸம்), 1. அவதாரணார்த்தம் (இது விசேஷ்ய ஸங்கத ஏவகாரமென்றும் விசேஷணஸங்கத ஏவகாரமென்றும் இரண்டு விதம். விசேஷ்ய ஸங்கத ஏவகாரமாவது "பார்த்த ஏவ தநுர்த்தர:" முதலானவற்றில் ஏவகாரம் பார்த்தரூப விசேஷ்யத்தோடு ஸங்கதமாய், பார்த்தனைக் காட்டில் மற்றொருவரிடத்தில் தநுர்த்தரத்வம் இல்லை என்று அந்யயோக வ்யவச்சேதத்தைப் பண்ணும். விசேஷணஸங்கத ஏவகாரமாவது "சங்க: பாண்டர ஏவ" என்கிறவிடத்தில் ஏவகாரம் பாண்டரரூப விசேஷண ஸங்கதமாய் சங்கத்தில் பாண்டரத்வாஸம்பந்த நிவ்ருத்தியைப் பண்ணுவதாகிற அயோகவ்யவச்சேதத்தைப் பண்ணும். 2. ஸாத்ருச்யம் 3.வாக்யபூரணம் 4.அநிச்சயம் (க்வேவபோக்ஷ்யநே).
ஏவம் - (ஸம்), 1. இந்த ப்ரகாரம் 2. அங்கீகாரம்
- (தே), குற்றம்
ஏவலம் - (தே), ஏவவல்ல ஸாமர்த்யம்
ஏவலர் - (தே), அம்பு
ஏவல் - (தே), ஏவுதல்
ஏவல் கொள்ளுதல் - (தே), அடிமை கொள்ளுதல்
ஏவல்லவெந்தை - (தே), அம்பெய்யவல்ல சக்கரவர்த்தி திருமகன் - (ஏவல்ல எந்தைக்கிடம் இர.திரு.70).
ஏவாய் - (தே), 1. அம்பு பட்ட வாய் 2. எய்யப்பட்ட
ஏவி - (தே), நியமித்து
ஏவிடம் - (தே), நியமித்த இடம்
ஏவு - (தே), 1. யுத்தம் 2. அம்பு 3. ஏவுகை 4. வருத்தம்
ஏவுண்டு - (தே), (பாணத்தினால்) தைக்கப்பட்டு
ஏவுதல் - (தே), 1.அனுப்புதல் 2. எழுப்பிவிடுதல் 3.கற்பித்தல் 4. செலுத்துதல் 5.நியமித்தல் 6.தூண்டி விடுதல்
ஏச - (தே), பரிஹஸிக்க
ஏசம் - (தே), வெண்கலம்
ஏசல் - (தே), 1.பழி வார்த்தை 2.நிந்தை 3.வைதல்
ஏசறுகை - (தே), வருத்தப்படுகை
ஏசறும் - (தே), பழிப்பதில் துணிந்த (ஏசறும் ஊரவை கவ்வை திருவாய்.5-3-1).
ஏசாதவர் - (தே), குற்றமற்றவர்
ஏசாதே - (தே), தூஷியாதே
ஏசி - (தே), 1. கிளி 2. பழித்து
ஏசு - (தே), 1. பரிஹாஸம் 2. குற்றம் 3. அவஸாதம்
ஏஷ: - (ஸம்), அருகிலிருக்குமவன்
ஏஷண: - (ஸம்), இரும்பாலாகிய பாணம்
ஏஷணாத்ரயம் - (ஸம்), மூன்று வகைப்பட்ட ஆசைகள். அவையாவன லோகைஷணை,

புத்ரைஷணை, வித்தைஷணை. இவைகளையெல்லாம் பிராம்மணர் விட்டு ஸந்யஸித்து, வைராக்ய பலமாய் ஔபதேசிகமான வேதார்த்த நிஷ்டாதராய், ஸ்வமாஹாத்ம்யாதிகளை ப்ரகாசியாமலிருப்பதாகிற பால்யத்தை உடையவராய் பரப்ரஹ்மத்தை உபாஸிக்க வேணும். “ப்ராஹ்மணா:புத்ரேஷணாயாச்ச வித்யைஷணாயாச்ச லோகைஷணாச்ச வ்யுத்தாய அதபிக்ஷாசர்யம் சரனை பாண்டித்யம் நிர்வித்ய பால்யேந திஷ்டாஸேத்” ப்ர.உப.5-5-1).

ஏஷதே - (ஸம்), போகிறான் (ஏஷ கதௌ ப்வா-கர்த்தரி லட்).

ஏஷா - (ஸம்), சமீபத்திலிருக்குமவள்

ஏழமை - (தே), 1. எளிமைத்தனம் 2. தாரித்ரியம்

ஏழளவும் - (தே), ஏழ்படிகால்

ஏழாட்காலும் - (தே), ஏழு புருஷர்கள் முதற்கொண்டு (ஏழாட்காலும் பழிப்பிலோம் திருப்பல்.3).

ஏழாணை - (தே), திவ்ய ஆஜ்ஞை (ஏழாணை ஓட்டினான் நான்.திருவ.61).

ஏழிசை - (தே), ஸப்த ஸ்வரங்கள்

ஏழு - (தே), ஓர் எண்ணிக்கை

ஏழுமராமரம் - (தே), ஸப்த ஸாலவ்ருக்ஷங்கள். (முன்பு சக்ரவர்த்தி திருமகன் ருஷ்யமுகத்தில் இருந்த இந்த ஏழு ஸால மரங்களை வாலி வதத்தில் சங்கித்த சுக்ரீவ விஸ்ரம்பார்த்தமாக ஒரே பாணத்தினால் துளைபடச் செய்தருளினார்).

ஏழேழ்பிறவி - (தே), ஏழேழ் ஜன்மங்கள்

ஏழை - (தே), 1. சபலையானவள் 2. அறிவில்லாதவன் 3.தரித்ரன் 4. ம்ருதுவானது

ஏழைமை - (தே), தாரித்ரியம்

ஏழையர் - (தே), 1.ஸ்த்ரீகள் 2. அறிவில்லாதவர்கள்

ஏழையேன் - (தே), சபலனான நான்

ஏழ் - (தே), 1. ஒரு எண்ணிக்கை 2. ப்ரகாரம்

ஏழ் கடல் - (தே), ஸப்த சமுத்ரம்

ஏழ் குன்றம் - (தே), ஸப்த குல பர்வதங்கள்

ஏழ்ச்சி - (தே), 1. வ்ருத்தி 2. விகாஸம் (ஏழ்ச்சிக்கேடின்றி எங்ஙனும் நிறைந்த எந்தாய் திருவா.3-2-4).

ஏழ்படிகால் - (தே), ஏழு தலைமுறையாய் (ஏழுபடிகால் தொடங்கி திருப்ப.6)

ஏழ்பார் - (தே), ஏழு லோகங்கள்

ஏழ் மெலியல் - (தே), ஓர் படைவீடு

ஏழ்விடை - (தே), ஸப்த ருஷபங்கள் (இந்த ஸப்த ருஷபங்கள் நப்பின்னை பிராட்டியின் விவாகத்தின் பொருட்டு சுல்கமாக வைக்கப்பட்டவைகளாய், இவைகளைக் கண்ணபிரான் ஸம்ஹரித்து நப்பின்னைப் பிராட்டியை பாணிக்ரஹணம் செய்தருளினார்.(ஏழ்விடையடங்கச்செற்றனை திருவெழு.).

ஏளனம் - (தே), 1. அவஜ்ஞையாகப் பண்ணும் ஹாஸ்யம் 2. நீக்கல்

ஏற - (தே), 1. அதிகமாக 2. உயர, 3. எப்பொழுதும்

ஏறக்கடுக்கி - (தே), (வசைகளைக்கையில்) ஏறச்சேர்த்து